www.padippakam.com


# செஞ்சக்தி

செய்திப் பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

1998 செப்டம்பர் | அணி 04 படை 02 | நன்கொடை 7.00 ரூபாய் | மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்



புதிய நூற்றாண்டுக்குத் தயாராவோம் !

மக்கள் விடுதலை முன்னணியின்
கிளை பிரதிநிதிகள் மாநாடு

களுத்துறை மாவட்டம்

பொதுச் செயலாளர்
தோழர் டில்வின் சில்வா அவர்களின் தலைமையில்
ஒக்டோபர் 02.மாலை 2மணிக்கு
பாணதுறை நகரசபை மைதானத்தில்


# வட – கிழக்கில் வதை முகாம்கள் சகிதம் ராணுவ நிர்வாகம் !

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பாதுகாப்போடும் ஒத்துழைப்போடும் தாம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்திருப்பதாக் பீற்றிக் கொள்ளும் தமிழ் இனவாத ஆயுத கோஷ்டிகள் சில வட-கிழக்கில் பல பிரதேசங்களில் உத்தியோகபூர்வமற்ற இராணுவ நிர்வாகத்தை கொண்டு செல்வதாகவும், அதன் மூலம் அப்பிரதேச வாழ் மக்கள் கடுமையான துன்பத்துக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாகியிருப்பதாக தெரியவருகிறது. கடந்த வாரம் சர்வதேச மன்னிப்புச் சபையினால் இந்த இனவாத ஆயுத இயககங்களினால் நடத்திச் செல்லப்படும் சித்திரவதை முகாம்களைக் குறிப்பிட்டு, இந்நிலமைகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கேதுவான நடவக்கைகளை மேற்கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருந்தபோதிலும், தமக்குக் கிடைக்கும் சில நன்மைகளினால் பொதுசன முன்னணி அரசாங்கம் தொடர்ந்தும் இக்குழுக்களுக்கு உதவி உபசாரங்களை செய்துவருவதாக தெரியவருகின்றது.

இப்போது 'புளொட்' 'டெலோ' போன்ற இயக்கங்கள் வவுனியாவில் ரம்பைக்குளம், கோவில்குளம், வேலுக்குளம் போன்ற பல இடங்களில் சித்திரவதை முகாம்கள் சகிதம் ராணுவ நிர்வாகத்தை கொண்டுசெல்கின்றனர். ஈ.பி.டி.பி இயக்கம் யாழ்ப்பாணம், அக்கரைப்பற்று, மேலும் பல இடங்களில் வதை முகாம்கள் சகிதம் ராணுவ நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதேபோன்றதோர் நிர்வாகத்தைக் கொண்டு செல்கிறது. இந்த எல்லா இயக்கங்களுக்கும் இவர்களின் கொலைகார நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்காக தேவையான ஆயுதங்கள் உட்பட எல்லா நேரடி, மறைமுக வழிகளில் சலுகைகளையும செய்து கொடுத்திருப்பது பொதுசன முன்னணி அரசாங்கமேயாகும்.

கடந்தவார வாராந்த பத்திரிகையொன்றுக்கு புளொட் அமைப்பின் ராணுவ பொறுப்பாளர் மாணிக்கதாசன் அளித்துள்ள போட்டியில் தெளிவாக கூறியிருப்பது குறிப்பிட்ட பிரதேசங்களில் நிலங்களை பகிர்ந்தளிக்கும செயல்கள் தாமே செய்வதாக குறிப்பிட்டிருந்தார்

இதேபோல் அரசாங்கத்தின் அனுசரணையோடு இலங்கை வங்கியிலிருந்து ஈ.பி.டி.பி. 300 லட்ச ரூபாய் வங்கிக் கடன் பெற்றுக் கொண்டுள்ளது. இவர்களது ஆயுத பலத்தையும வன்முறைகளையும பயன்படுத்தி இவ்வியக்கங்களை தேர்தல் வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்து பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவங்களைப்

7ம் பக்கம் பார்க்க.......

## சமாதான தேன்நிலவுக்கு மீண்டும் தயார்.

தென்னாபிரிக்கா அல்லது பிரித்தானியா மத்தியஸ்தின் கீழ் மீண்டும் எல்.ரீ.ரீ.ஈ க்கும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் சூழ்நிலை தென்படுவதாக அரசாங்கத்தின் நெருங்கிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஜனாதிபதி பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொண்டபோது இதுபற்றிய பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும், அப்பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட இணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் அரம்பிக்கப்படவிருப்பதாக அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் அரசாங்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளில் எல்.ரீ.ரீ.ஈ யுடன் ஈடுபடவேண்டுமென்று, கோரும் போது, ஜனாதிபதி சந்திரிகா எல்.ரீ.ரீ.ஈ யுடன் நிபந்தனையுடனான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடப்போவதாகக் கூறுகிறார். எப்படியாயினும் மீண்டும் மூன்றாவது நபரின் தலையீட்டின் கீழ் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் ரணிலின் இக்கூற்று எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் அழுத்தத்தினால் ஏற்பட்டதென மேலும் ஐ.தே.க. தகவலொன்று தெரிவிக்கிறது.

எப்படியாயினும், இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்பு, ஐ.தே.க. யையும் பேச்சுவார்த்தைகளில் இணைத்துக் கொள்ளவேண்டுமென அரசாங்கம் முடிவுசெய்திருப்பதாக தெரிகிறது. பேச்சுவார்த்தைகளில் அடிப்படைப் பிரச்சினைகளை ஐ.தே.க உடன் கலந்தாலோசித்து பேச்சுவார்த்தை மேசையில்அமர்ந்தால், பேச்சுவார்த்தைகளில் ஏற்படும் சாதக பாதக விளைவுகள் அரசாங்கத்தின் மீது மாத்திரம் சுமத்தப்படாதெனவும் தெரியவருகிறது.

எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் எந்தவொரு தேர்தலுக்கு முன்பும், சமாதானம் தோன்றப்போவதாக காட்டுவதற்கான தேவை அரசாங்கத்துக்கும், தமது சக்தியை பலப்படுத்திக்கொள்வதற்காக பேச்சுவார்த்தை மேடை எல்.ரீ.ரீ.ஈ க்கும்அத்தியாவசியதேவையாயிருக்கிறது. இப்போது நடந்துகொண்டிருப்பதும் இந்த இருநோக்கங்களையும் நிறைவுசெய்யக் கூடுமென தகவல்கள் தெரியவருகிறது.

## ஜனாதிபதி மாளிகை புதுப்பிக்கப்படுகிறது !

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு அரசியல் பிரதிநிதிகள் தங்குமிட தேவையாகவெனக் கூறிக்கொண்டு, சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு மாறாக 'டெண்டர்' கோராது ஜனாதிபதி மாளிகையை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான முழுச் செலவு 980 இலட்சம் ரூபாவாகும். இவ்வாறு பெரும்பணத்தை ஏப்பம் விட்டு புதுப்பிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையில் ஒரு சார்க் பிரதிநிதியேனும் தங்கவைப்பதற்காக பயன்படுத்தவில்லை. வறுமையைப் போக்கும் அரசாங்கத்தின் சிறப்பான திட்டம்.

## பாலியல் சுரண்டல் !

நிலஅபிவிருத்தி திணைக்களத்தில் வேலை செய்கின்ற தோழர் ஒருவர் 'செஞ்சக்தி'க்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். ஆனால் ஒரு மாறான செய்தி .

இக்கூட்டுத்தாபனத்தில் தற்காலிக அடிப்படையில் (நிரந்தரமற்ற) சில பெண் சகோதரிகளை வேலைக்கு அமர்த்தி இவர்களது உழைப்பை சுரண்டப்படுகிறது. இவர்கள் அனைவரும் தொழில் நிரந்தரமாக்கப்படாதவர்கள். நிரந்தரமான தொழில் அல்ல. இதனால் இவர்கள் அனைவரும் தமது தொழிலைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நிர்வாகிகளின் காலைப் பிடிக்க வேண்டியுள்ளது.

இப்போது பிரச்சினை உக்கிரமடைந்துள்ளது. இங்கே இருக்கும் ஒரு காம வெறியனின் (அதிகாரி) இந்த யுவதிகளுக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தலைச் செய்கிறார். தமது ஆசைக்கு இசையாவிட்டால் தொழிலிலிருந்து நீக்குவதாக அச்சுறுத்துகிறான் இக்காமவெறியன். அதேவேளை இங்கு வேலை செய்யும் ஏனைய அதிகாரிகள் என்ன மாடுகளா?

## இடதுசாரிகளின் எதிர்ப்பு துண்டு பிரசுரம் நாடு முழுவதும் விநியோகம்!



யுத்தத்தைக் காரணம் காட்டியும், நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை பிரகடனித்தும் ஆகஸ்ட் 28ம் திகதி நடத்தப்படவிருந்த மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் பின்போட்டுள்ளது. இதற்கெதிராக மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜ கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, தியச ஆய்வு வட்டம் உட்பட பல தொழிற்சங்க அரசியல் அமைப்புக்களும் கூட்டுச்சேர்ந்து கடந்த மாதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் எதிர்ப்பு துண்டு பிரசுரங்களை இடதுசாரி தலைவர்கள் மக்களுக்கு விநியோகிப்பதையே படத்தில் காண்கின்றோம். இவ்வெதிர்ப்பு நடவடிக்கைக்கு 80 ஜூலை வேலையிழந்தோர் சங்கம், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், லேக்ஹவுஸ் ஊழியர் சங்கம் ஆகியனவும் தமது பூரண பங்களிப்பை அளித்திருந்தது.

## ம.வி.மு. மாவட்ட மாநாடுகள் நடைபெறும்

எதிர்வரும் சில மாதங்களில் எல்லா மாவட்டங்களிலும் கிளை பிரதிநிதிகள் மாவட்ட மாநாடுகளை நடத்தப்போவதாகக் கடந்த வாரம் கூடிய மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு முடிவு செய்திருக்கிறது. அரசியல் குழுவின் இம்முடிவுகளை மத்திய கமிட்டிக் குழு ஆமோதிக்கின்றது. 1999ம் வருடத்தைத் தவிர்க்க முடியாது அரசாங்கம் தேர்தல் ஆண்டாக முடிவுசெய்ய வேண்டியிருப்பதாலும், எதிர்வரும் எவ்வாறான தேர்தலுக்கும் பலம் வாய்ந்த சக்தியாக முகம் கொடுக்கும் நோக்கத்துடன் கட்சி அமைப்பை அதற்கு ஏற்றவாறு கட்டியமைத்து விரிவான மறுசீரமைப்பை செய்வதே இம் மாநாடுகளின் நோக்கமென்றும், இது தொடர்பாக 'செஞ்சக்தி' ம.வி.மு பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களிடம் வினவியபோது 'முதலாவது கிளை பிரதிநிதிகள் மாநாடு களுத்துளையில் நடைபெறுகின்றது என்றும், மேலும் காலி, ஹம்பாந்தோட்டை, குருனாகல், கம்பஹா, அனுராதபுரம் போன்ற மாவட்டங்களிலும் இம் மாநாட்டிற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் முடிவுற்றுள்ளதாகவும் டில்வின் சில்வா அவர்கள் மேலும் கூறினார்.

7ம் பக்கம் பார்க்க.....

## தேர்தல் நடைபெறும் சாத்தியக்கூறு!

இப்போது நீதிமன்றத்தில் நடைபெறும் சட்டவிதிகளுக்கேற்ப மாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலிருந்து நழுவமுடியாதென்பதை உணர்த்துகின்ற பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தலைமைப்பீடம், விருப்பமில்லாவிட்டாலும் மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராக வேண்டியிருப்பதாக தமது இரண்டாம்தர தலைமைகளுக்கு அண்மையில் அறிவித்திருக்கிறது. அதாவது நீதிமன்ற தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முன்பு தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிப்பதற்கு அரசாங்கம் உள்ளாகப்போவதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல்கள் தெரியவருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி தேர்தலை பின்போட்டமைக்கு எதிராக மாகாண ரீதியில் 5 வழக்குகளும், மக்கள் விடுதலை முன்னணி தனது கட்சி சார்பில் எல்லா மாகாணங்களுக்கும், மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்களின் பொறுப்பின் கீழ் ஒரு வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

ஐ.தே.கட்சி 3 மாகாணங்களுக்கு மாத்திரம் பாதிக்கக்கூடிய வழக்கை தாக்கல் செய்திருந்தபோதிலும், ஏனைய இரண்டு மாகாணங்களுக்கும் தேர்தலை பின்போட்டமைக்கு எதிராக எல்லா மாகாணசபைகளுக்குள்ளான வழக்கை ஐ.தே.க தாக்கல் செய்யவில்லை என்பது அவதானிக்கக்கூடிய ஒன்றாகும். இதனால் ஐ.தே.க. யால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் சாதகமான விளைவுகள் எதனையும் தரப்போபோவதில்லையென்றும்.

தேர்தலை பின்போடுவதற்கு

7ம் பக்கம் பார்க்க......

www.padippakam.com



## உலகச் செய்திகள்...

### ● இத்தாலி

## தொழில் இல்லாதோர் ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸாரின் தடியடி!

இத்தாலியில் தொழிலில் இருந்து வேலை நீக்கப்பட்ட தொழிலாளர்களும் தொழிலற்ற ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளும் சேர்ந்து 'உடனடியாக தொழிலைப் பெற்றுக்கொடு' என்ற போராட்ட சுலோகத்தின் கீழ் அணிதிரண்டு அமைதியான முறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு இத்தாலி அரசாங்கம் தனது கலகம் அடக்கும் பொலிஸாரை ஏவிவிட்டு கண்மூடித்தனமான முறையில் அடக்கியுள்ளது. இத்தாலியில் பிரதான நகரங்களான மிலானோ, பல்ர்மோ, நாபோலியில் இந்த ஆர்ப்பாட்டம் மிகவும வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. இத்தாலியில் உள்ள எல்லா பொதுசன ஊடகங்களும் அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத செயலை வன்மையாகக் கண்டித்து, விமர்சித்துள்ளது. அதேவேளை இத்தாலிய தொலைக்காட்சியில் இதற்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கமுடியாது திணறிப்போனதாக வெளிநாட்டு செய்தி சேவைகள் தெரிவிக்கின்றன.

தொழில் இன்மைக்கு தீர்வும், கல்விமான்களுக்குரிய சமூக அந்தஸ்து எப்படியாயினும், குறைந்த பட்சம் தமது வாழ்க்கையைக் கூட கொண்டுசெல்ல முடியாது திண்டாடும்போது முன்னேறிய




நாடென பீற்றிக்கொள்ளும் எல்லா முதலாளித்துவ நாடுகளும முகம் கொடுக்கும் நெருக்கடி உக்கிரமடைவதை அவர்களால் ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது என்பது மாத்திரம் உறுதியென நடுநிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### ● ஐக்கிய அமெரிக்கா

## ஜெனரல் மோடர்ஸ் போராட்டம்வெற்றியுடன் முடிவடைந்தது !

கடந்த மாதம் (ஆகஸ்ட்) 'செஞ்சக்தியில்' வெளிவந்த ஐக்கிய அமெரிக்காவின் பெரிய 3 நிறுவனங்களில் ஒன்றான ஜெனரல் மோடர்ஸ்' (GENARAL MOTORS) கடந்த மூன்று மாதமாகத் தொடர்ந்து நடந்த மாபெரும் வேலைநிறுத்தம் பாரிய வெற்றிகளோடு கடந்த வாரம் முடிவுற்றது. ஐக்கிய அமெரிக்காவிற்கு மாத்திரமல்ல முதலாளித்துவ இரும்பு பாதங்களில் நசிந்து கஸ்டப்படும் அகில உலக தொழிலாளர் வர்க்கத்துக்கும் நல்லதோர் படிப்பினையையும் முன்னுதாரணத்தையும் அளித்து முடிவுற்ற இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் 9200 ஊழியர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

கிழக்கு டெல்ஸி பிரிவை (PLANT) யை விற்பதற்கு நிர்வாகம் மேற்கொண்ட முடிவை 2000 ஆண்டுவரை இடைநிறுத்தி வைப்பதற்கும், ஒரு வார விடுமுறை கொடுப்பனவுகள் நிறுத்திய (வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டதால்) வேலைநிறுத்தக்காரர்களுக்கு ஊதியம் வழங்காது, உதிரிப் பாகங்களை அகற்றுவதற்கு எடுத்த முடிவை (FLINTMETAL CENTOR) பிரிவில் உதிரிப் பாகங்களை அகற்றாது மீண்டும் நிறுவுவதற்காக, 180 மில்லியன் டொலர் இறக்குமதி செய்வது உட்பட தொழிலாளர்களின் மானியம், தொழிலுக்கான உறுதி போன்ற கோரிக்கைகளை வெற்றிகொள்வதற்கு 'ஜெனரல் மோடர்ஸ்' ஊழியரின்




வெற்றியைக் இரண்டு மாதங்களாக ஜெனரல் மோட்டர்ஸ் க்கு சொந்தமான 2 நிறுவனங்களில் நடைபெற்ற மாபெரும் வேலைநிறுத்த போரராட்டத்தினால் அந்நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டம் 2.5 மில்லியன் டொலர்களாகும்.

கிடைத்துள்ள வெற்றியோடு எதிர்வரும் காலங்களிலும் போராடுவதற்கு தாம் தயார் என்று வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர் கோஷங்கள் கூறி உறுதி பூண்டனர்.

### ● ஆஸ்திரேலியா

## இனவாதத்திற்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில்




பாசிசவாதமும், இனவாதமும் நாடு முழுவதும் பல கோணங்களில் தலைதூக்கியுள்ளது. அவுஸ்திரேலியாவில் இருக்கும் வலதுசாரி அரசியல் தலைவியொருவரான வன் நேசன் பார்ட்டியின் (One Nation Party) தலைவி போலின் என்செனின் (Pauline Hanson) இனவாதத்திற்கு எதிராக கடந்தவாரம் 1000 திற்கும் மாணவ மாணவிகள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆஸ்திரேலியாவில் 8 நகரங்களில் உயர் பாடசாலைகளில் மாணவர்களே இந்த எதிர்ப்பு போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதன் அடிப்படை நோக்கம் என்னவெனில் ஆசிய குடியேற்றகாரர்கள் உட்பட சிறுபான்மையினருக்கு எதிராக போலின் என்சனின் இனவாதத்தை கண்டிப்பதற்காகவே அணிதிரண்டனர். கடந்த ஜீன் 13ம் திகதி குயின்ஸ்லாந்து நடந்து முடிந்த தேர்தலில் 23வீத வாக்குகளைப் பெற்ற போலின் என்சனின் (One Nation Party) கவனிக்கதக்க ஒன்றாகும்.

# சர்வகட்சி மாநாடு – ஒரு கட்சி மாநாடாகியது

பொதுசன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் மத்தியில் நாளுக்குநாள் பெருகிவரும் அதிருப்தி காரணத்தினாலும், அரசியல், பொருளாதார ரீதியல் நலிவடைந்திருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி மீளமுடியாத பாதாளத்தில் அமிழ்நதிருக்கும இவ் வேளையில், தன்னை மீண்டும் மக்கள் மத்தியில் நிலைநிறுத்திக் கொள்வதற்காக அரும்பாடு பட்டுக்கொண்டிருக்கிறது. உட்கட்சிப் பூசலால் பலவீனமுற்றுள்ள இந்த அரசாங்கம்.

இதேவேளை தேர்தல் மோசடி, லஞ்சம், ஊழல், போன்றவற்றால் நாட்டையே அடகுவைத்து, 17வருடங்களாக மக்களது சுதந்திரத்தை குழிதோண்டிப் புதைத்து ஒரு லட்சம் மக்களைப் படுகொலை செய்த ஐக்கிய தேசியக் கட்சி.

தனியார் மயத்தின் மூலம் நாட்டு வளங்களை சூறையாடிய, கலை கலாச்சார ரீதியில் முழு நாட்டு மக்களை சீரளித்த, தேசிய பிரச்சினையை வளர்த்து நாட்டு பிரிவினையின் உச்சத்திற்கே மக்களை தள்ளியதன் சிற்பிகள் யூ.என்.பி கொலைஞர்களாகும்.

இதுபோன்ற நாட்டு மக்களுக்கு பேரழிவை பெற்றுக்கொடுத்த ஐ.தே.க. இப்போது பசுந்தோல் போர்த்திய புலியாக மக்களது கண்ணீரைத் துடைப்பதற்குப் புறப்பட்டுள்ளது. அண்மைக்காலம் முதல் ஐ.தே.க. யில் ஏற்பட்டிருக்கும் பிளவுகள், உட்கட்சி பூசல்களால் மலிந்து கிடக்கும் ஐ.தே.க. இவைகளை மூடிமறைப்பதற்காக தயார் செய்த போலி வேலைத்திட்டமே சர்வகட்சி (ஒரு கட்சி) மாநாடு.

### மாநாட்டின் நோக்கம்:

சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொலிஸ் சேவை ஆணைக்குழு, சுதந்திர பொதுச்சேவை ஆணைக்குழு என்பன குறித்து 17 வருடங்களாக (இவைகளை துஷ்பிரயோகம் செய்த) ஐ.தே.க. வெளியிட்டுள்ள யோசனைகள் தொடர்பாக ஆராயும் ஆலோசனைக் கூட்டத்திற்குக் கடந்த திங்களன்று எல்லா அரசியல் கட்சிகளையும் இலங்கை மன்றக் கல்லூரிக்கு வரும்படி அழைப்பு விட்டிருந்தது.

அரசாங்கத்தின் (பொ,ஐ.மு) சார்பில் இதில் எவரும் கலந்துகொள்ளவில்லை. சதாகாலமும் பொ.ஐ.மு வுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிகளுக்கு வால் பிடிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டி.பி, ரெலோ போன்ற மக்கள் செல்வாக்கற்ற முதலாளித்துவ கொலைகாரர்களை நம்பி அரசியல் பிழைப்பு நடத்தும் இந்த சிரிய குழுக்கள் இந்த மக்களை ஏமாற்றும் போலி மாநபாட்டில் கலந்துகொண்டு ஊளையிடுகின்றன.

அழைப்புகள் கிடைத்தும், ம.வி.மு. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, லங்கா சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை முற்போக்கு முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற்சங்கங்கள் என்பன கூட்டத்தைப் பகிஷ்கரித்துவிட்டன.

மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மாநாயக்கர்கள் ஓர் அரசியல் கட்சியின் கூட்டத்தில் கலந்து யோசனைகள் தெரிவிப்பது பயனற்றதெனக் காரணம் காட்டி இந்த ஒரு கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

எனவே ஐ.தே.க எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றும் கதையும் கானல் நீராகிவிட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## குரே கும்பல் தயாராகின்றன!

ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைத்துவத்துக்கெதிராக கொழும்பு கொச்சிக்கடை (தெற்கு) ஐ.தே.க யின் அமைப்பாளர் எம்.எஸ் அமரபாலவின் தலமையில் 'குரே கும்பல்' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். கடந்த ஆகஸ்ட் 31ம் திகதி பகல் 10 மணிக்கு இல:33 சாஞ்சியாராச்சி தோட்டத்தில் அமைந்திருக்கும் 'இசுரு' கட்டிடத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எம்.எஸ் அமரபாலவின் தலமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு பெரும் திரளான மக்களும் கலந்துகொண்டுள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவின் தலமைத்துவத்திற்கு எதிராக மத்திய கொழும்பு மக்களை அணிதிரட்டுவதே இந்த 'குரே கும்பலின்' குறிக்கோளென கூறப்படுகின்றது.

## பொலிஸாரின் பொய் வாக்குமூலத்துக்கு தண்ட(ம்)னை!

1998 ஜனவரி மாதம் 15ம் திகதி முதல் 31 வரை நடைபெற்ற ம.வி.மு.யின் தேர்தல் அமைப்புக்களை விரிவுபடுத்தும் இரண்டு வார காலப்பகுதிகளில் அம்பலங்கொடை தேர்தல் தொகுதி அதிகாரச் சபையை ஸ்தாபிப்பதற்காக 98.01.26ம் திகதி பெந்தர பிரதேசத்தில் இரவு கூட்ட அலங்கரிப்பு வேலை செய்துகொண்டிருந்த ம.வி.மு அங்கத்தவர்கள் ரொஷான் லியனகே, சிரில் ஜயாநந்த ஆகிய இரண்டு தோழர்களை பெந்தர பிரதேச சபை உபதலைவரும் மதுபானச் சாலை உரிமையாளருமான பத்தினிகே தொன் அருள்கவும் அவரது காடையர்களான சஞ்ஜீவ ஜயவர்த்தன, பெந்தர ஜனகலா கேந்திரத்தின் படபெந்தி

7ம் பக்கம் பார்க்க......

படிப்பகம்

www.padippakam.com





## விஷேச வெளிப்படுத்தல்

# கேஸ் ஏகபோக பல்தேசிய முதலை

## பாவனையாளரையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் விழுங்குகிறது!

# சந்திரிகா ! எங்கே வழக்கு !

இலங்கையில் கேஸ் விற்பனையை முற்றாகவே இப்போது ஷெல் காஸ் என்ற பல்தேசிய நிறுவனத்திடம் ஒப்படைப்பதோடு எண்ணெய் கூட்டுத்தாபனம் பாரிய நஷ்டத்தை நோக்கி சென்றவண்ணமிருப்பதாகவும், ஷெல் காஸ் நிறுவனத்தின் பாதுகாப்போடு தொடர்ந்தும் கேஸ் பாவனையாளர்களையும் , பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் சுரண்டி விழுங்கப்பட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

1995ம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கை கேஸ் கம்பனியை ஷெல் எனும் பல்தேசிய தாபனத்திற்கு 32 மில்லியன் டொலருக்கு விற்றது. ஆனால், பின்பு ஷெல் கம்பனி கேஸ் கம்பனிக்குச் சொந்தமான நிலத்தின் ஒரு பகுதியை மீண்டும் அரசாங்கத்துக்கு விற்று, 7.2 மில்லியன் டொலரை ஈட்டிக்கொண்டது. இவ்வாறு மிகவும் இலாபகரமான முறையில் இலங்கை கேஸ் கம்பனியை பெற்றுக்கொண்ட ஷெல் கம்பனிக்கு 5 வருடத்திற்கு காஸ் தொடர்பாக ஏகபோகம் சொந்தமானது. அதேவேளை, வருடந்தோறும் 10மூ த்தால் கேஸின் விலையை அதிகரிக்கவும் ஷெல் கம்பனிக்குக் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்தது.

இலங்கையில் நாளாந்த கேஸின் தேவை 320 தொன்களாகும். இப்போது அன்றாடம் கேஸ் பாவனை குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 05 மெட்ரிக் தொன்களால் அதிகரிக்குமென இது தொடர்பாக விடயமறிந்த வட்டாரங்களின் கருத்தாகும். இப்போது 4000 மோட்டார் வாகனங்கள் கேஸின் மூலம் இயங்குகின்றது. இவ்வாறு பரந்து விரிந்திருக்கும் வியாபாரச் சந்தையை 05 வருடத்திற்கு ஷெல் கம்பனியின் ஏகபோகத்திற்கு விடுவதென்பது தங்க முட்டையிடும் கோழியொன்றை இலவசமாக ஷெல் கம்பனிக்குக் கொடுப்பதற்கு சமனாகுமென பொருளியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இப்போது மசகு எண்ணெய் ஒரு பெரலின் விலை 23 இல் இருந்து 13 ரூபாவாக குறைந்துள்ள வேளையில், அதனால் எல்.பி காஸின் விலை வருடம் தோறும் 10மூதினால் அதிகரிக்கப்படுகன்றது. அதற்கு மேலாக, இந்தக் கம்பனி சாதாரண காஸ் சிலின்டர் நிறையை 500கிலோகிராமினால் குறைத்துள்ளது.

இதுபோன்ற பாரிய இலாபத்தை ஷெல் கம்பனி ஈட்டிக்கொண்டிருப்பது, அதற்கான வரிவிலக்கு அளிக்கப்பட்டு மேலும் பல மானியங்கள் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் படி வழங்கப்பட்டுள்ள போதேயாகும். இப்போது காஸ் இறக்குமதி செய்வதற்கு தமக்கு வழங்கப்பட்டுள்ள 05 வருட ஏகபோகம் மேலும் பல வருடங்களுக்கு நீடிக்கும்படி ஷெல் கம்பனி அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

**இலங்கையில் நாளாந்த காஸின் தேவை 320 டொன்களாகும். இப்போது அன்றாடம் காஸ் பாவனை குறைந்தபட்சம் மாதமொன்றுக்கு 05 மெட்ரிக் தொன்களால் அதிகரிக்குமென இது தொடர்பாக விடயமறிந்த வட்டாரங்களின் கருத்தாகும். இப்போது 4000 மோட்டார் வாகனங்கள் காஸின் மூலம் இயங்குகின்றது. இவ்வாறு பரந்து விரிந்திருக்கும் வியாபாரச் சந்தையை 05 வருடத்திற்கு ஷெல் கம்பனியின் ஏகபோகத்திற்கு விடுவதென்பது தங்க முட்டையிடும் கோழியொன்றை இலவசமாக ஷெல் கம்பனிக்குக் கொடுப்பதற்கு சமனாகுமென பொருளியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.**



பாவனையாளர்களுக்கு புறம்பாக இலங்கை அரசுக்கும் ஷெல் கம்பனிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமும் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் பாரிய நெருக்கடியில் தத்தளிக்கவிடப்பட்டிருப்பது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும். அது ஷெல் கம்பனிக்குத் தேவையான மூலவளங்களான காஸ் உற்பத்தி செய்யும் இலங்கையிலிருக்கும் ஒரே ஒரு நிறுவனமாகும். இலங்கை காஸ் கம்பனி இருந்த காலத்தில் காஸ் விற்பனை மூலம் அதற்கு பெரும் இலாபத்தை ஈட்டியது. ஆனால், இன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் காஸின் விலையைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஷெல் கம்பனி ஒப்பந்தத்தின் மூலம் ஷெல் கம்பனி வசமிருப்பதால், ஷெல் கம்பனி பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் எல்லாக் கேஸையும் விலைகொடுத்து வாங்காததினால் வருடம் தோறும் பாரிய நஷ்டத்தை சந்திக்கவேண்டிய நிலைமைக்கு எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆளாகியிருக்கின்றது.

இந்நிலைமையை முன்பே தெரிந்துகொண்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடும் காலப்பகுதியில் தமக்கும் ஷெல் கம்பனிக்கும் இடையே நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒரு சில நிபந்தனைகள் பிறப்பிக்கப்படவேண்டுமென அரசாங்கத்திடம் தெரிவித்தது. ஆனால் ஒப்பந்தம் செய்திருப்பது அவ்வாறான நிபந்தனைகள் எதுவுமின்றியேயாகும். அதன்படி, இன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் காஸ் வேறு எந்தவொரு நிறுவனத்துக்குமட் விற்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் முடியாமலுள்ளது. எனவே, எண்ணெய் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தியாகும் கேஸ் எல்லாவற்றையும் ஷெல் கம்பனி கொள்வனவு செய்யாததினாலும் மீதமுள்ள பெரும் தொகையான கேஸை எண்ணெய் கூட்டுத்தாபனத்தினால் எரித்துவிட வேண்டிய நிலமை தோன்றியுள்ளது. இவ்வாறு வருடம் தோறும வீண் விரயமாகும் கேஸ் 2000 தொன் களாகுமென அறியவருகிறது. இலங்கை கேஸ் கூட்டுத்தாபனம் இருந்த காலத்தில் (1993) வருடமொன்றுக்கு 16614 தொன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்தது. அது 1994ல் 15,266 தொன் ஆகும. அதேவேளை ஷெல் கம்பனியுடன் தனது கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 1995 பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் 3765 தொன்கள் மாத்திரமே விற்கப்பட்டது. 1997ல் அது 13894 தொன்களாகும். வேறு நிறுவனங்களுக்கு காஸை விற்பதற்கு அனுமதியில்லாததினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மிகுதியுள்ள காஸ் இதன்படி எரித்துவிடுகிறது.

இந்நிலமையின் கீழ் ஷெல் கம்பனி நிர்ணயிக்கும் விலைகளுக்கு காஸ் விற்க வேண்டியிருப்பதினால், மிகுதியுள்ள காஸ் வேறு நிறுவனங்களுக்கு விற்பதற்கான அதிகாரம் இல்லாததினாலும், 1996 ம் ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 19 மில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளது. 1997 அது மேலும் பல மில்லியன்களால் அதிகரித்துள்ளது. 1998 வருடத்திற்கான பெற்றோலியக் கூட்டுத்தாபனமிடமிருந்து ஷெல் காஸ் கம்பனி 10.65 சதத்துக்கே ஒரு கிலோ காஸ் விலையை நிர்ணயித்துள்ளது. ஷெல் கம்பனி பாவனையாளர்களுக்கு ஒரு கிலோ காஸை 23.ஸ்ரீ வுக்கு விற்பனை செய்து பெரும் லாபத்தை ஈட்டிக்கொள்கிறது. இந்நிலமையின் கீழ் இந்த உடன்படிக்கை நாட்டுக்கு ஏற்படுத்திய நஷ்டம் கணக்கிட முடியாத தொகையாகுமென்று பொருளியல் நிபுணர்களின் கருத்தாகும்.



கடந்த சில நாட்களுக்கு முன்பு சந்திரிகா அம்மையார் ஷெல் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக தொலைக்காட்சி மூலமும் வேறு தொடர்புசாதனங்கள் மூலமும் அறிவித்தார். ஷெல் கம்பனிக்கு அரசாங்கத்திற்கும் இடையே இருக்கின்ற மோசடிமிக்க கொடுக்கல் வாங்கல்கள் இவ்வாறான எதுவிதமான சட்ட நடவடிக்கைகளுக்கு இணங்காது என்பது மாத்திரம் உறுதியான வெட்ட வெளிச்சமாகும்.

---

## "உள்ளூராட்சி சபை ஊழியர்களை ஓரணியில் திரட்டி மாபெரும் சக்தியைக் கட்டியெழுப்புவோம்."

கண்டி டி.எஸ்.சேனநாயக்கா நூலக கேட்போர் கூடத்தில் அகில இலங்கை உள்ளூராட்சி மன்றப் பொது ஊழியர் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு மாபெரும் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது. மேலே உள்ள படத்தில் கூட்டத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் தலைவர் குணசிறி மல்லிகாரச்சி, செயலாளர் அநுரா கோணவெல, பொருளாளர் விமல தர்ம மாதம்பகே ஆகிய தோழர்கள் கூட்டத்தில் உரையாற்றுவதையும், நடுவில் உள்ள படம் கண்டி நகரசபை தோழர்களால் அலங்காரமான நிர்மாணிக்கப்பட்ட மேடை. கீழே : கூட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான அங்கத்தவர்களையே

இச்சங்கத்தில் இன்று நாடு பூராவும் இருக்கின்ற மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை போன்றவற்றில் தொழில் புரிகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கத்துவத்தை பெற்றுள்ளனர். இன்று பாரிய சக்தியாக வளர்ச்சியுறும் அகில இலங்கை உள்ளூராட்சி மன்றப் பொது ஊழியர் சங்கத்தின் முதலாவது வருட நிறைவு விழாவுக்கு செஞ்சக்தியின் புரட்சிகர வாழ்த்துக்கள்.







படிப்பகம்

www.padippakam.com



## அரசியல் குறிப்பு

# பின்போடப்பட்ட தேர்தல், பொருளாதாரமும் வ...

மாகாணசபைத் தேர்தலை பின்போடப்பட்டிருப்பது நாடு முழுவதும் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தேயாகும். தங்களுக்கு பாதகமான விளைவுகளைப் பெற்றுக்கொடுக்கவிருந்த தேர்தல் பின்போடப்பட்டதை நியாயப்படுத்த அரசாங்கம் கூறிய காரணம் நாடு பூராவும் பாதுகாப்புக்கு குந்தகமான நிலைமை தோன்றியிருப்பதேயாகும். அதனால், அவசர காலச் சட்டத்தை பிறப்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதென்றும், நியாயமான தேர்தலை நடத்துவதற்கு இந்நிலைமை தடையாக இருப்பதினால் தேர்தலை பின்போடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டோம் என்றது. இவ்வாறான செயற்பாட்டின் மூலம் அரசாங்கம் தமது அரசியல் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு திட்டமிட்டு மக்களை ஏமாற்றுவது நன்றாகத் தெளிவுபடுகின்றது. ஆனால் அதே செயற்பாட்டின் மூலம் தாம் இன்னொரு நெருக்கடியின் பாதாளத்தில் விழுந்திருப்பதை அரசாங்கம் உணரவில்லை. ஆனால், இப்போது நடந்துகொண்டிருப்பது, சகல வழிகளிலும் நெருக்கடி உக்கிரமடைவதைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்துகொண்டிருக்கின்றது.

இலங்கையில் பங்குச் சந்தையென்பது இந்நாட்டு பொருளாதார இருப்பை அளவிடக்கூடிய முதலானதும், இறுதியானதும் நல்ல நிர்ணயிப்பு அல்ல. ஆனால் இலங்கையில் முதலாளித்துவ வியாபாரச் சந்தை பொருளாதாரத்தின் நிலை வளர்ச்சியா ! வீழ்ச்சியா ! என்பதைப்பற்றி முடிவுசெய்வதற்காக பங்குச்சந்தையின் மூலம் வெளியிடும் கருத்துக்கள் பெரும் பங்கை வகிக்கின்றது. இன்று இலங்கையில் பங்குச் சந்தையின் 7 வருட காலக்கில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சிக்கும் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளது. ஆசிய பிராந்தியத்தில் பொதுவாக ஏற்பட்டுவரும் பொருளாதார வீழ்ச்சியே குறிப்பிட்ட



சம்பவங்களுக்குக் காரணமென சில பொருளாதார 'ஒஸ்தார்கள்' முயற்சித்தாலும் உண்மையான முழுமையான நிலமை அதுவல்ல. கொழும்பு பங்குச் சந்தையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு அண்மித்த பிரதான காரணியாகவிருப்பது நாடு முழுவதும் அவசரகால நிலையை பிறப்பித்தது தேர்தலை பின்போட்டதன் மூலம் அரசாங்கம் சர்வதேசத்துக்கு வழங்கியுள்ள அத்தாட்சியேயாகும். 'இன்று அமைதியான நிலமையின் கீழ் நாடு முழுவதும் தேர்தலை நடத்த முடியாத நிலமைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்' என்ற அரசாங்கத்தின் உறுதிமொழி 'முழுமையாக' வழங்கியிருக்கின்றது. இந்த உறுதியின் மூலம் குறிப்பாக பாதிக்கப்படுவது இரவு பகலாக அரசாங்கத்தை பூஜித்து அரசாங்கத்தை தம் பால் ர்க்துக்கொள்வதற்கு முறபட்டுக்கொண்டிருக்கும் முதலீட்டாளர்களின் மன உணர்வுகளுக்கே பாதிப்பை தருகின்றன. அரசாங்கம் ஒருதடவை இவர்களுக்கு வட-கிழக்கில் மாத்திரமே பிரச்சினை இருப்பதாகவும், தெற்கில் அமைதி நிலவுகிறது ஆகவே எவரும் அஞ்சத் தேவையில்லை என்றது. ஆனால், இன்று அரசாங்கமே முதலீட்டாளர்களுக்கு கூறியிருப்பது, வடக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லையென்றே. சட்டப்படி நடத்தப்பட வேண்டியிருந்த தேர்தலைக் கூட நடத்த முடியாத நிலமை தோன்றியுள்ளது.

அரசாங்கம் தம் முன்னால் தோன்றியிருக்கும் அரசியல் நெருக்கடிக்கு அளித்திருக்கும் பதில் பொருளாதாரத் துறையில் எழமுடியாத விடயமாக மாறியிருக்கின்றது. முதலாளித்துவ முன்னணி பொருளியல் நிபுணர்களும் இன்று கூறுவது யாதெனில், தேர்தலை பின்போட்டமையும் அவசரகால சட்டத்தை நாடு முழுவதும் பிறப்பித்ததன் காரணமே பங்குச் சந்தையின் வீழ்ச்சிக்கு அண்மித்த காரணியென குறை கூறும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் ஒரு புறதகதே மறைப்பதற்கு சென்று பல்லாயிர ஓட்டைகள் தோன்றியுள்ளதையே இது காட்டுகின்றது.

அரசாங்கம், தேர்தலை பின்போட்டு எதிர்பார்த்தது என்னவென்றால், அத்தேர்தலிலிருந்து நழுவிச் செல்வதற்காகவேயாகும். அதை நழுவவிட்டு வேறு அதாவது தமக்கு சாதகமான தேர்தலுக்கு தேவையேற்படின் செல்வதற்கேயாகும். இந்நோக்கத்திற்காக, அரசாங்கம் தமது பொருளாதார இருப்பின் உயிரை பழிகடாவாக்கியுள்ளது. அடுத்ததாக நாம் சிந்திக்க வேண்டியிருப்பது அவ்வாறான பழியிடுதல் மூலமும் தேர்தல் பின்போடல் மூலம் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் பிரச்சினைகள் என்னவென்பதையே.

இப்போது தேர்தலை பின்போட்ட அரசாங்கத்தின் முடிவு நீதிமன்றத்துக்குச் சென்று சிக்களை உருவாக்கியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் கட்சி என்றடிப்படையில் அரசாங்கத்தின் இம்முடிவுகளுக்கு நீதிமன்றத்தின் முன் சவாலாக அமையவில்லை. அதற்குப் பதிலாக ஐ.தே.க செய்திருப்பது மூன்று மாகாணங்களை பிரதிநிதித்துவம் செய்து தமது அபேட்சகர்களின் விண்ணப்பத்தின் ஊடாக 3 வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறது. அரசியல் கட்சியாக ஐ.தே.க. யிற்கு தேர்தலை பின்போட்ட முடிவுகளை சவால் விடுவதற்கான தகுதிகள் மிகவும் நலிவடைந்த நிலையிலேயே இருப்பதாக சட்ட வல்லுனர்களின் கருத்தாகும்.

அதற்கான காரணம் , ஐ.தே.க. ஆரம்பம் முதலே தேர்தலை பின்போடும் அரசாங்கத்தின் முடிவுகளுக்கு எதிராக பெரும் எதிர்ப்பை தெரிவிக்காததேயாகும். அடுத்த காரணி, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமானால் மாகாண சபைத் தேர்தலை பின்போடுவதற்கு தாம் உடன்படுவதாக விட்ட பகிரங்க அறிக்கையாகும்.

ஐ.தே.கட்சி ரீதியாக தேர்தலை பின்போடும் முடிவுக்கு சவாலுக்குள்ளாக்கியிருந்தால் மேல் குறிப்பிட்ட ரணிலின் அறிக்கையும் பேச்சுக்களும ஐ.தே.க. க்கு பாரி தோல்விமிக்க விளைவுகளை ஏற்படுத்த என்று சட்ட வல்லுனர்கள் கருதுகின்றன இதனால், ஐ.தே.க. அரசியல் கட்சியா அரசாங்கத்தின் முடிவுகளுக்கு சவா விடுப்பதிலிருந்து நழுவிச் சென்றுள்ள ஆனால், மக்கள் விடுதலை முன்ன அரசியல் கட்சியாக அரசாங்கத்தி முடிவுகளுக்கு நீதிமன்றில் சவா விட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி உத்தியோகபூர்வமாக தேர்தலை பின்போடுவதற்கு முன்பிருந்தே அவ்வாறான போக்குக்கு எதிராக பாரி எரிப்புகளை விடும் அமைப்பாகவிருந்த அது ஒருபோதும், அரசாங்கத்தி தேர்தலைப் பின்போடும் முயற்சிக்கு சார்பா எந்தவொரு அறிக்கைகளையு விடவில்லை. இதனால், அரசிய அமைப்பாக 05 மாகாணங்களுக்கும் உ தேர்தலை பின்போட்டமை பற்றி ம.வி. நீதிமன்றில் தாக்கல்செய்திருக்கும் ம மிகவும் சக்திவாய்ந்ததென சட் வல்லுனர்கள் கருதுகின்றன அதேவேளை, ம.வி.மு. ஐ.தே.க போலல்லாது குறிப்பிட்ட மாகாணங்களுக்கு வெவ்வேறாக மனுக்கள் நீதிமன்றத்திற்கு தாக்க செய்திருக்கிறது.

இந்த நீதிமன்ற செயற்பாடுக அரசாங்கத்தை எவ்வாறான நெருக்கடி நோக்கி இட்டுச் செல்லும்? இங் நீதிமன்றத்தின் முடிவுகளும் தீர்ப்புகளு எப்படியானாலும் அது அரசாங்கத்தை பாரிய நெருக்கடியில் ஆழ்த்துவது தவிர முடியாத ஒன்றாகும். சிலவேளை தீர்ப்புச அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தேர்தல

---

**இந்நாட்டில் இருக்கின்ற இடதுசாரி அரசியல் இயக்கங்கள் மத்தியில் பரந்தளவிலான ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக மக்கள் விடுதலை முன்னணி மேற்கொள்ளப்பட்ட முயற்சி இப்போது வளர்ச்சியுறும் கட்டத்தை அடைந்துவருகிறது. மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜ கட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, தியச ஆய்வு வட்டம் போன்ற அரசியல் கட்சிகளுக்கிடையேயும், அமைப்புக்களுக்கிடையேயும் உருவாகி செயற்படும் இவ் ஐக்கியம் இன்னும் கூட்டு நடவடிக்கைகளிலேயே இருக்கின்றது. அண்மையில் இந்த அமைப்புகளும் அரசியல் கட்சிகளாலும், தமது ஐக்கிய நிலைப்பாட்டின் அடிப்படையை விளக்கியும், தமது கருத்துக்களை வெளியிட்டும் கூட்டுப் பிரகடனம் ஒன்றை மக்களுக்கு சமர்ப்பித்தனர். அது இந்த ஒற்றுமைக்கான கிடைக்கப்பெற்ற சக்திவாய்ந்த முன்னேறிய முதல் படியென்பதில் சந்தேகமில்லை. அந்தக் கூட்டுப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கப்படும் அடிப்படை மீது கட்டியெழுப்பப்படும் ஐக்கிய செயற்பாடுகளுக்கு கிடைக்கக்கூடிய சக்தி எவ்வாறானது? அந்த அடிப்படை மீது கட்டியெழுப்பப்படும் எதிர்காலத்துக்கு எவ்வாறான ஒளியை தரும்? இதுபோன்ற தீர்க்கமான பிரச்சினைகள் இன்று சமுகத்தின் முன்னால் இருப்பது அந்தக் கூட்டறிக்கையை அடிப்படையாகக் கொண்டேயாகும். இக்காரணிகள் ஊடாக, அந்த இடதுசாரிகள் நாம் தீர்மானித்தோம். இது தொடர்பான கருத்துக்களை நாம் ஆதரவோடு எதிர்பார்க்கின்றோம்.**



# ஐக்கிய நடவடிக்கைக்கான இடது...

விழிப்புணர்வையும் இணக்கத்தையும் ஏற்படுத்தும் நம்பிக்கையில் இலங்கையிலுள்ள இடதுசாரி கட்சிகளும் இதர அமைப்புக்களும் கலந்துரையாடலில் ஈடுபட்டன மக்கள் விடுதலை முன்னணி, நவசமசமாஜகட்சி, ஐக்கிய சோஷலிச கட்சி, மற்றும் தியச ஆய்வு வட்டம் ஆகிய அமைப்புகள் இக் கலந்துரையாடலில் பங்குபற்றின. அவ் அமைப்புக்கள் தமது கலந்துரையாடலின்போது ஐக்கியத்திற்கான முயற்சி தொடர்பான அரசியல் விடயங்கள் பற்றி ஒரு கூட்டுப்பிரகடனம் வெளியிடவேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அமையவே இப்பிரகடனம் வெளியிடப்படுகின்றது.

17 வருட காலமாக முன்னாள் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு இருந்தது. அது ஏகாதிபத்தியவாதிகள் தொடர்பாக மிக மென்மையான போக்கை கொண்டிருந்தது. பின்பு 1994ல் ஆட்சியை கைப்பற்றிய பொதுஜன முன்னணி அரசாங்கம் பல வாக்குறிதிகளை வழங்கியிருந்தது. ஆனால் 4 வருட ஆட்சியின் பின் அது வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றவில்லை.

மாறாக பொதுஜன முன்னணி அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் அடிச்சுவட்டையே பின்பற்றுகின்றது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்களின் ஆலோசனைகளையே பின்பற்றிவருகின்றது. பண்டங்களின் விலை அதிகரித்துள்ளன. மானியங்களும் நல்ன்புரி சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அதே நேரத்தில் எத்துணை முக்கியம் வாய்ந்த தேசிய சொத்துக்களும் பல்தேசிய கம்பனிகளிற்கு விற்கப்பட்டு வருகின்றன தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொடர்புசாதனவியலாளர்கள் அடக்கியொடுக்கப்படுகின்றனர். ஜனநாயக உரிமைகளை மறுத்தல், தேர்தல்களை ஒத்திவைத்தல் மற்றும் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்காக இனவாதத்தை பாவித்தல் ஆகியன இன்றைய அரசாங்கத்தின் இதர துற்செயல்களாகும். சிறுபான்மை சமூகத்தின் மீது முடுக்கிவிடப்பட்ட இம்சைகளும் கொடுமைகளும் இந்த நாட்டு மக்களிற்கு குறிப்பாக பெண்களிற்கும் சிறார்களிற்கும் முடிவில்லா துன்பத்தை அளித்துள்ளத

அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கத்தினரின் சார்பாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு எதிராக போராட்டங்களும் நடத்தப்பட்டன ஆனால் அத்தகைய போராட்டங்கள் ஒவ்வொரு அமைப்பினாலும் தனித்தனியாகவும் வெவ்வேறாகவும் மேற்கொள்ளப்பட்டபடியால் ஜனநாயச விரோத நடவடிக்கைகளை முறியடிக்க முடியவில்லை. எனவே அடக்கியொடுக்கும் மக்களை முன்னி வழிநடத்தி அரசியல் போராட்டங்கள் நடத்துவதன் மூலம் கூடிய விரைவி ஜனநாயக விரோத நடவடிக்கைகளை தோற்கடிப்பது வரலாற்றுக்கட்டாயமா

பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளிடம் இருந்து நமக்கு கிடைத்த போலியான சுதந்திரம் ஆகும். அதைத்தொடர்ந்து இலங்கையில் நவ குடியேற்றவாத ஆட்சியே இடம்பெற்றுவந்துள்ளது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக பல முதலாளித்த அரசியல் கட்சிகள் ஆட்சி செய்து கண்டவிளைவு அழிவு தான். இந்த முதலாளித்துவ அரசாங்கங்களிற்கு துணை போயிருந்த பல இடதுசாரி கட்சிகள் இந்த நாட்டில் ஒரு இடதுசா அரசாங்கம் அமைப்பதற்கான சந்தர்ப்பத்தை பாழடித்தன. எனவே இறுதியில் மக்களின் சக்தியானது நாட்டில் நிலவும் தேசிய நெருக்கடிக்கு வித்திட்டன. ஒரு நிலையான சமாதானத்தினை உருவாக்கும் பொருட்டு அந்த பிரச்சினையை தீர்ப்பதை விடுத்து இந்த முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தை போலவே வடக்குக்கிழக்கில் யுத்தத்தை நடத்தி வருகின்றது. நாட்டை அழிவுப்பாதையில் இட்டுச் செல்கின்றது. இதனால் இந்த முதலாளித்துவாதிகளிற்கே வெள்ளித்தட்டில் வழங்கப்பட்டது. ந குடியேற்ற வாதி நிலைப்பாட்டில் பிற்போக்கான முதலாளித்துவ சமூக பொருளாதார ஆட்சி முறையினை தொடர்ந்து முன்னெடுத்த இந்த முதலாளித்துவ கட்சிகள் இலங்கை மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கா ஆற்றலையோ குறிக்கோளையோ கொண்டிருக்கவில்லை. மாறாக

www.padippakam.com



ர்போட்டமையை ஏற்றுக்கொண்டு ப்பளித்தாலும்கூட, என்றாவது ஒருநாள் ரசாங்கத்தினால் முதலில் த்தப்படவேண்டியது மாகாணசபைத் ர்தலாகும். அதிலிருந்து நழுவி சாங்கம் ஜனாதிபதி தேர்தலை நேர்ககிச் ல்லுமானால், அப்போது, நாட்டு சையோ அரசியல் இயக்கமோ திவைக்கப்பட்ட தேர்தலை நடத்துவதற்கு ந்தரவிடுபடி நீதிமன்றத்தை கோர முடியும். வ்வாறான நிலைமைகளிலிருந்து சாங்கம் மீள்வதற்கான வழியிருக்கிறதா க் கூறுவதற்கு சட்டவல்லுனர்களுக்கு டியாதுபோகும். அதேவேளை, சியலமைப்புச் சட்டவிதிகளுக்கு நகஷ்ட சகிதம் மாகாணசபைத் தேர்தலை



# ...தம், அரசாங்கமும்

றுவதேயாகும். அப்போது அரசாங்கம் லுக்கு நலிவடைந்த நிலையிலேயே பவேண்டிவரும். மேற்குறிப்பிட்ட க் காரணிகளையும் கவனத்தில் ம்போது தெளிவாகும் அடிப்படைக் ி, பொதுசன முன்னணி அரசியல் க பாரிய நெருக்கடியில் ந்திருப்பது தென்படும். அது, ண்ட தம்மை மீட்கும் பணிக்கான பம் நழுவிவிட்டதாகும்.

தனால் அரசாங்கம் தயாராவது பான தேர்தலுக்காக அல்ல. தாம் பியோ விருப்பமின்றியோ எதிர்வரும் து ஒரு தேர்தலுக்காக முகம் ப்பதற்கு அரசாங்கம் ாகிக்கொண்டிருக்கிறது. தாம் ாவது எந்தத் தேர்தலுக்கென ங்கத்தின் பெரும் புள்ளிகளுக்கும் பாது. தம்மால் முடிவு பப்படவேண்டியவை இப்போது முடிவாவது தமக்கு வெளியிலிருந்தாகுமென அரசாங்கம் இப்போது நன்குணர்ந்துள்ளது. அவ்வாறான முடிவுகள் அரசாங்கத்தின் பலவீனத்தை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றதாகும்.

எப்படியாயினும், இந்நிலமைகளை தெளிவாகக் கணிப்பிட்டு அரசாங்கத்தையும், அதேபோல் அதற்கு மேலாக தலைமை உட்கட்சி பூசல்களால் நலிவடைந்திருக்கும் ஐ.தே.க. என்ற இரண்டையும் ஒரே தடவையில் தோற்கடிப்பதற்காக சக்திகளை அணிதிரட்டிக்கொள்வதற்கு இடதுசாரி சக்திகள் உறுதி பூணவேண்டும். இந்நிலமைகளின் கீழ் சாதகமான பிரயோகத்தைப் பெற்று மக்கள் வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்க முடிவது அவ்வாறானதொரு நேரடியான செயற்பாடுகளின் உறுதியாக செயற்படுவதன் மூலமேயாகும்.

கடிகளை படு மோசமான நிலைக்கு ச்செல்வதற்கே அவர்கள் உதவின. வதான் இந்த பரிதாப நிலையில் து. இந்த நாட்டை மீட்டு மையான அபிவிருத்திப்பாதையில் ச்செல்வது எமது பணியாகும். ாளி வர்க்கம் அரச அதிகாரத்தை பற்றினால் மட்டுமே இந்த பினை நிறைவேற்றமுடியும். என்பது வானதாகும். ஒருமுதற் படியாக இடதுசாரி மத்திய நிலையத்தை யெழுப்புவது பெரியதொரு ாற்றுத் தேவையாகும்.

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள மையை சீர்தூக்கி பார்த்ததை ந்து நாட்டிலுள்ள இடதுசாரி களும் அமைப்புக்களும் ஐக்கியப்பட ண்டும் என்று உணரப்பட்டுள்ளது. தொடர்பாக பல முயற்சிகள் கொள்ளப்பட்டதுடன் இதை மேலும் னெடுக்கும் நோக்குடன் துசரிகட்சிகள் மற்றும் மைப்புகளிற்கிடையிலான நாம் ந்துரையாடலை ஆரம்பித்துள்ளோம். எமது நாட்டிலுள்ள சமூக ருளாதார அரசியல் நிலைமைகள் துவான ஐக்கிய ப்பட்ட ராட்டத்தை நடத்துவதற்கு எம்மை ண்டுகின்றன. அந்த போரட்டத்தின் பசியத்தை புரிந்து கொள்ளும் மைப்புகள் என்ற வகையில் எமது றந்தபட்ச/அதிகபட்ச குறிக்கோள்கள் ி எமக்கு தெளிவான எண்ணம் க்க வேண்டும். முதலாளித்துவ எமது அதிகபட்ச நோக்காகும். எனவே தான் இந்த நாட்டின் இடதுசாரி இயக்கமானது ஒரு நீண்டகால கண்ணோட்டத்துடன் அன்றாடம் சமூக பொருளாதார பிரச்சனைகள் மீது போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும். அதேவேளை ஒரு இடது சாரி அரசாங்கத்தை அமைக்கும் இலக்கை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும் முதலாளித்துவம் முறியடிக்கப்பட்டு இடதுசாரி அரசாங்கத்தை அமைக்கும் இலக்கை நோக்கி நகர்ந்து செல்ல வேண்டும். முதாலளித்துவம் முறியடிக்கப்பட்டு இடதுசாரி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமாயின் முதலில் பல்வேறு அம்சம்கள் அடங்கலான இடதுசாரி போராட்டங்களை முடுக்கிவிடக்கூடிய ஒரு இடதுசாரி மத்திய நிலையம் அமைக்கப்பட வேண்டும். எமது பணியின் தன்மையை சீர்தூக்கி பார்க்குமிடத்து இது ஒரு இலகுவான காரியமல்ல.என்பது புரியும். இத்தகைய ஒரு உறுதிவாய்ந்த இடதுசாரி நிலையத்தினை நோக்கி நகர்வது ஒரு சிக்கலான விடயமே.

எனவே அதற்காக நாங்கள் நிச்சயமான, தெளிவான இலக்குகளை நோக்கி முன்னேற வேண்டும் இது குறைந்த பட்ச, கூடிய பட்ச, மட்டங்களில் அமைவதாகவும் இருத்தல் வேண்டும். இன்று ஒற்றுமை நாடி நிற்கும் சக அமைப்புகள் மத்தியில் உள்ள ஒற்றுமைகளையும்

## ...இயக்கங்களின் கூட்டு பிரகடனம்

சாங்கத்தின் ஜனநாயக விரோத பற்பாடுகளிற்கு எதிராக ஒரு ராட்டத்தை நடத்தவது எமது றந்த பட்ச இலக்காகும். அதன் ம் நாம் மக்கள் இயக்கங்களிற்கு வூட்டி, விழிகாட்டி அந்த டத்திலான அவர்களது உரிமைகளை ன்றெடுக்கச் செய்யலாம். ஒரு இடது அரசாங்கத்தை அமைக்கக் கூடிய திய நிலையத்தை அமைப்பது தான் வேற்றுமைகளையும் ஆராய்வதற்கு நாம் தள்ளப்படுகிறோம். இந்த நாட்டு வரலாற்றில் இடதுசாரிகள் பல முன்னணிகளை அமைத்து ஐக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட அநுபவங்களை விசேடமாக மனதில் கொண்டு நாம் எதிர் நோக்கிய சவால்களையும் நோக்கும் இடத்து

7ம் பக்கம் பார்க்க......

# கல்வி சீர்திருதத்தை தோற்கடிக்கும் பொருப்பு நாட்டின் சகல மக்களினதும் இன்றைய கடமையாகும்!

சோஷலிச மாணவர் சங்கத்தின் – தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க

**அரசாங்கம் மீண்டுமொருமுறை இலங்கையில் கல்வி முறைமையை சீர்திருத்தம் செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு, அதை முழுமையாக புதைத்துவிடும் செயற்பாடுகளில் ஈடுபட்டவண்ணமிருக்கிறது. இப்பிரச்சினை இலங்கை மாணவர் இயக்கத்தின் பிரச்சினையாக வரையறுப்பதற்கு பல பொதுசன ஊடகங்கள் செயற்பட்ட வண்ணமுள்ளனர். ஆனால், நாம் இதை ஓர் தேசிய பிரச்சினையாகவே கருதுகின்றோம். எனவே அதுபற்றிய கலந்துரையாடல் இரண்டை நாம் உங்கள் முன் வைப்பதற்குத் தீர்மானித்தோம். கிழே அந்த இரு கலந்துரையாடல்களும்.**



கடந்த வருடம் (1997)ல் செயற்படுத்துவதற்கு முயற்சித்த கல்விச் சீர்திருத்தம் நாட்டின் சகல புத்திஜீவிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்விட்ட முற்போக்கு சக்திகளின் எதிர்ப்பினால் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் சுருட்டிக்கொள்ளப்பட்ட செய்தி நாம் அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆனால், இப்போதும் மீண்டும் எதுவித மாற்றங்களின்றி செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டவண்ணமிருக்கிறது.

இந்தக் கல்வி சீர்திருத்த யோசனையை ஆராய்ந்த எமக்கு அரசாங்கம் கல்வியில் கொண்டுள்ள சில கொள்கைகளை இனம்காண இயலுமாயிருக்கிறது.

1) நாட்டு மக்களுக்குரிய கல்வி கற்கும் உரிமையை இல்லாதொழித்தல்.

2) பாடமுறைகளிருக்கின்ற பண்புரீதியான தன்மையை இல்லாதொழித்தலும் நாட்டிலிருக்கின்ற பாடங்கள், பரீட்சைகளைத் தரம் குறைத்தல்.

3) நாடு வளர்ச்சியுறும் சமூகமாக மாற்றுவதற்குப் பதிலாக தொடர்ந்தும் தோல்விமிக்க பின்தங்கிய அரசாகத் தொடர்ந்து கொண்டு செல்வதைக் குறிக்கோளாகக் கொண்டு கல்வி சீர்திருத்தத்தை மறுசீரமைக்கப்பட்டிருப்பது.

4) கல்வி நிறுவனங்களைத் தனியார்மயமாக்குதல்

5) கல்வி தொடர்பான செயற்பாடுகளில் ஆசிரியர்களின் பணியை மதிப்பிறக்கல். (கல்வி சீர்திருத்தம் தயாராகும்போது ஆசிரியர்களின் கருத்துகளுக்கு கடுகளவேனும் கவனத்தில் கொள்ளாதது இதற்கான தெளிவான உதாரணமாகும்.)

6) நாட்டின் கல்வித் துறை தொடர்பாக அரசாங்கம் பொறுப்பில்லாத நிறுவனமாக செய்திருப்பதைக் கூற முடியும்.

1)இக்காரணிகள் கேள்விக்குட்படுவது கல்விச் சீர்திருத்த யோசனையில் இருக்கின்ற விடயங்களை உதாரணமாகக் கொண்டால், ஆரம்ப வகுப்பு கல்வி சீர்திருத்தத்திற்கு ஏற்ப அரசாங்கம் பிரேரித்துள்ளவற்றை மேலோட்டமாகப் பார்க்கும்போது உயர்வானது. ஆனால் விரிவாக ஆழமாக பார்த்தோமானால் நடைமுறைக்கு உதவாத வேலைத்திட்டமாகும். அதன்படி வகுப்பறையை மாற்ற வேண்டிய நிலை தோன்றுகின்றது. அதற்காக குறைந்துபட்சம் 150,000 ரூபாய் செலவாகும். ஆனால் இதற்கான நிதியை அரசாங்கம் வழங்காது. இதேபோல் வகுப்பறையொன்றில் 35 மாணவர்கள் இருக்கவேண்டுமெனவும் சட்டமூலம் இயற்றியுள்ளது. இதனால் ஒரு வகுப்பறையுடன் 1ம் வகுப்புக்கு இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களின் கல்விக்கூடம் மூடப்படும்.

2. ஒன்பதாம் வகுப்பில் பாடசாலையை விட்டுச் செல்வதற்காக பரீட்சையொன்று நடத்தப்படும். இதனால் பொருளாதார நெருக்கடி மத்தியில் பாடசாலை வரும் பெருமளவிலான மாணவர்கள் பாடசாலையை விட்டகலுவதற்குத் தூண்டப்படுகின்றது.

3. உயர்தரத்தில் புதிய பாடம் 4 பாடங்களிலிருந்து 3 பாடங்களாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் அறிவுக்குறைந்த மாணவர்கள் உருவாவதும், இக்காரணத்தினால் சில பட்டப்படிப்புகள் (உதாரணமாக இலத்திரனியல் பொறியியல், கணனி பொறியியல்) நிறுத்தப்படவேண்டிய நிலை ஏற்படும்.

4. பல்கலைக்கழக நுழைவுக்கு நுண்ணறிவு பரீட்சையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் நாட்டில் நிலவுகின்ற மூலவளம் பகிர்ந்து போதும் பாகுபாடுகளினால் உக்கிரமடையும் நெருக்கடி மாத்திரமல்ல உயர்தரத்தை தரம்குறைத்து, பெரும்பாலான ஊழல் மோசடிக்கு ஏதுவான நிலமையை தோற்றுவித்தல்.

இதோ இதனால் இந்த கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுமானால் நாடு அறிவின் பாலைவனமாக மாறுவது நிச்சயம். அதனால் நாம் இத்தருணத்தில் முற்போக்கு சக்திகளிடமும் மக்களிடமும் கேட்பது இந்த அழிவைத்தரும் கல்விச் சீர்திருத்தத்திற்கு எதிராக எதிர்ப்பைதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்

# அந்த நுண்ணறிவுப் பரீட்சை பற்றி எங்களுக்கு எந்தவித தெளிவுமில்லை!

பேராசியர் கே.எஸ் வல்கம அவர்கள்

*செஞ்சக்தி: தற்போதைய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள உயர்தர பாடங்களை மாற்றங்களுக்குள்ளாக்குவதற்காக பொறியியல் பீடத்தைப் போல யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதா? அவ்வாறெனில் அந்த திட்டம் எந்தளவுதூரம் புதிய சீர்திருத்தத்துக்குள் அடங்குகிறது?*

*பேராசிரியர் வல்கம:* பொறியியல் பீடத்தைப் போன்று கல்வி சீர்திருத்தத்தைப் போல திட்டமிடப்படவில்லை. அவ்வாறு ஆலோசிக்கப்படவுமில்லை. ஆனால் தனிப்பட்ட முறையில் சில யோசனைகள் பேசப்பட்டிருக்கக்கூடும். எவ்வாறெனினும் ஜயதிலக்க அறிக்கை வெளியிடப்பட்டதன் பின் உயர்தர பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கை 3ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதனை விட நுண்ணறிவுப் பரீட்சையொன்று குறித்தும் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. என்ற போதும் பாடங்களின் எண்ணிக்கை 3ஆக குறைக்கப்பட்டமை சரியானதா, பிழையானதா என்ற கேள்வி எழுப்பப்படவில்லை. எந்த பாடங்களை முன்மொழிகிறீர்கள் என்ற கேள்வியே எழுப்பப்பட்டது. அதன்படி நாங்கள் pure ஐயும் physics ஐயும் கட்டயப்பாடமாகவும், தெரிவுப்பாடமாக applied ஐயும் Chemistry ஐயும் தெரிவு செய்தோம்.

இதற்கிடையில் பாட சீர்திருத்த கமிட்டியால் மீண்டும் pureஐயும் physicsஐயும் இல்லாமல் செய்திருந்தார்கள். அதற்குப் பதிலாக combined mathsஐயும், higher mathsஐயும் தெரிவு செய்தார்கள். அதன்படி பீட கமிட்டியால் combined mathsஐயும், higher mathsஐயும் கட்டாயமாக்கினார்கள். தெரிவுப் பாடங்களாக chemistryஐயும் higher mathsஐயும் முன்வைத்தார்கள். இன்று அது தான் சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி physics, combined maths, higher maths என்பவற்றை எடுப்பவர்களுக்கு பொறியியல் பீடத்துக்கு நுழைய முடியாது. ஆனால் அதற்கு என்ன காரணம் என்பதை தெரிவிக்க இது வரை எமக்கு அறிவிக்கப்படவில்லை.

*செஞ்சக்தி: இந்த பாட சீர்திருத்தம் பொறியியல் பீடத்துக்கு எப்படி பாதிக்கும் என்பதை குறிப்பிடுவீர்களா?*

*வல்கம:* தற்போதைய பொறியியல் பாடநெறி உயர்தர பாடங்கள் நான்கை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தப் பாடங்கள் 4இலிருந்து 3ஆக குறைக்கப்படுகின்ற போது நிச்சயமாக முன்னரை விட இவ்விடயம் குறித்து குறைந்த அறிவுடனேயே பீடத்துக்கு செல்கின்றனர். உதாரணமாக pure, applied என்பவை combined mathsஇன் பகுதிகளை இணைத்து தான் அமைக்கப்படுள்ளது. முதலில் பொறியியல் துறை முகம் கொடுப்பது என்னவென்றால் குறைந்த கணித அறிவுடன் வரும் மாணவர்களை முகம் கொடுப்பதே. அந் நிலமையை இது மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

இரண்டாவது பொறியியல் பீடத்தவர் குறிப்பிட்ட சகல பாடங்களையும் நடைமுறைப்படுத்தப்படாததினால் முகம் கொடுக்கும் பிரச்சினை. (பொறியியல் பீடம் அதற்கு ஒரு நல்ல ஒரு உதாரணம்.) இதன் போது மாணவர்கள் தங்களின் தெரிவுச் சுதந்திரத்தையும் இழக்கின்றனர். அவர்களின் ஆற்றல் திறனுக்கு ஏற்ற பாடங்களை தெரிவு செய்கின்ற வாய்ப்புகளை இழக்கின்றனர். ஏனென்றால் கணிதத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர் பொறியியல் பீடத்துக்கு நுழையும் சந்தர்ப்பம் புதிய திட்டத்தின் கீழ் கிடைக்காமல் போகிறது. கணிதம், மற்றும் இராசாயண விஞ்ஞானத்தைப் பற்றி விளங்கியவர்கள் பொறியியல் பீடத்துக்கு செல்வதே சரியானது. ஏனென்றால் இந்த எந்த பக்கத்தாலும் போகக்கூடிய வகையில் பொறியியல் துறை உள்ளது.

*செஞ்சக்தி: இந்த சீர்திருத்தத்தின்படி பொறியியல் துறை பட்டதாரிகளின் எண்ணிக்கை குறையவோ அல்லது சர்வதேச அங்கீகாரத்தை இழக்க நேரிடக்கூடிய அபாயம் இருக்கின்றதா?*

*வல்கம:* தற்போது பொறியியல் பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட வேண்டியிருக்கிறது என்பது உண்மை. ஏனென்றால் இனி சிலவேளை பீடத்தில் முதல் வருடம் மாணவர்களின் கணித அறிவை வளர்ப்பதற்காகவே செலவிட வேண்டிவரப்போகிறது. அதன்படி இரண்டாவது, மூன்றாவது வருட பாடத்திட்டங்களும் மாற்றியமைக்க வேண்டிவரப்போகிறது.

*செஞ்சக்தி: உத்தேச கல்வி சீர்திருத்தத்தினால் அது நடக்குமா?*

*வல்கம:* தற்போது கலந்துரையாடல் மட்டத்தில் இருக்கின்ற பல்கலைக்கழக கல்வி சீர்திருத்தம் குறித்து சரியான மதிப்பீடு இன்றி இதுபற்றி குறிப்பிட முடியாது.


*செஞ்சக்தி: நுண்ணறிவுப் பரீட்சை பற்றிய தனிப்பட்ட கருத்தைக் கூறுவீர்களா?*

*வல்கம:* இங்கு குறிப்பிடப்படுகின்ற நுண்ணறிவுப் பரீட்சை பற்றி சரியான விளக்கம் இதுவரை எங்களுக்கு தரப்படவில்லை. ஒவ்வொருவரும் நேரெதிரான கருத்துக்களையே வெளிப்படுத்தி வருகின்றனர். சிலர் இதனை மாவட்டத்துக்குள் பரீட்சிக்கப்படும் என்று கூறுகின்றனர். சிலர் கூறுகின்றனர் பாடத்துக்கு அனுசரணையாக உள்ள நிலமையை மதிப்பிடுவதாக.எவ்வாறெனினும் இது குறித்து தெளிவில்லை. நான் நினைக்கிறேன் நகர்புற மாணவரின் பொது அறிவுக்கும் கிராமிய மாணவருக்கு கிடைக்கின்ற பொது அறிவும் ஒன்றல்ல. நாங்கள் வாழுகின்ற சூழல் தான் எமது பொது அறிவைத் தீர்மானிக்கும். கிராமிய மாணவரொருவருக்கு மரம், இலை, செடி, பறவை என்பவை பற்றி கூடிய அறிவு இருக்கும். நகர்புற மாணவருக்கோ தொடர்புசாதனங்கள், இயந்திரங்கள், வாகன போக்குவரத்து என்பவை குறித்து அதிக அறிவு இருக்கும். மேலும் இப்படியான நிலையில் மாணவர்களின் அறிவை எப்படி அளவிட முடியும். ஏனெனில் இவ் அறிவுகள் ஒன்றில் ஒன்று சளைத்தது அல்ல.

எங்களுக்குத் தெரியும் இன்று computer யுகம். ஆனால் கிராமிய பாடசாலையில் ஒரு விஞ்ஞான கூடமோ அல்லது குறைந்தது multi meter கூட இல்லாத நாடு இது. அதனால் பல மாணவர்களுக்கு பாரபட்சம் நிகழப்போகிறது.

www.padippakam.com






# உண்மை கொழும்பு

சிறிய குழந்தை கனவொன்று காண்கின்றது. அது உல்லாச உலகத்தில் அலைந்து திரிகிறது. பார்க்குமிடமெல்லாம் பசும் சோலைகள், வீதிகள் பகல் இரவு வித்தியாசமின்றி இருக்கிறது. அது காணும் கனவில் மாபெரும் நகரமொன்று, தொழில் பேட்டை .அடடா.. என்ன...! புதுமை ஒரு துளி பிரச்சினை இன்றி திகழ்ந்துபோயிருக்கும் மனிதர்கள் எதுவிதமான கலக்கமின்றி வேலையில் ஈடுபடுகின்றனர். வாகன நெரிசலில்லாத வீதிகளில் மருந்துக்குக் கூட குப்பை கூழங்களை காண முடியவில்லை. 'அம்மா இந்த உல்லாச நகரத்தின் பெயரென்ன? குழந்தை தன் தாயிடம் கேட்கிறது. மகனே இது தான் கொழும்பு நகரம்'

மேலே கூறியது கற்பனை கதையொன்றென நீங்கள் நினைப்பது நிச்சயம். கட்டுரையின் ஆரம்பத்தில் பயன்படுத்திய கனவு கதையை வெளியிடுவது சிட்டி வொச் (City Watch) நிறுவனத்தின் அனுசரணையோடு கொழும்பு நகரசபை ஏற்பாடு செய்த 2001 ம் வருடத்தில் கொழும்பு நகரத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் பற்றி கொழும்பு நகரசபை அதிகாரிகளையும் நகரசபை உறுப்பினர்களையும் தெளிவுபடுத்தும் பொருட்டு நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலாகும். ஆட்சியாளர்களுக்கும் திட்டமிடும் அதிகாரிகளுக்கும் ஏற்ப 2001 வருடமாகும்போது கொழும்பு சொர்க்க புரியாகும். கட்டுரையின் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டிய கதை இக்கலந்துரையாடலுக்குக் கலந்துகொண்ட அனைவரும இறுதியாகக் காண்பிக்கப்பட்ட 2001 ல் கொழும்பு நகரம் என்ற விவர்ணப்படமாகும்.

கொழும்பு நகரத்திற்கு நுழையும்போதும், நகரசபை கட்டிடத்தைச் சூழ கொழும்பு 7 பிரதேசத்தின் ஊடாக ஊடுருவிச் செல்பவர் (138-120 பஸ் வழி பாதைகள்) ஒருவர் 2001 வருடம்வரை காலத்தை வீணடிக்க வேண்டியதில்லையெனத் நினைக்கலாம். ஏனென்றால் அந்த மழலை கண்ட உல்லாச கனவுலகத்தை அனுபவிக்க முடியும்.

ஆனால் அதுவே உண்மையான கொழும்பு நகரமல்ல. கற்பனையான கொழும்பு நகரமாகும். உண்மையான கொழும்பை காண முடிவது வனாதமுல்லை பிரதேசத்தின் பக்கமாகும். இல்லாவிடில் பாணந்துறை மாவத்தை 'பீரியாவில்' அரச சார்பற்ற நிறுவனங்களின் பணத்தில்

ஹோட்டல்களில் குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து கொழும்பு நகரத்தைப்பற்றி 'கனவுலகில் மிதப்போர்' தங்களது உல்லாச அரசியலில் ஸ்தாபகர்கள் கொழும்பு நகரத்தை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் 2001ல் அல்ல ஒரு போதும் நிறைவேறாத கனவென தெரியவருகிறது. கொழும்பு 7 இல் அல்லது கறுவா தோட்டத்திலிருந்து (Cinnamon Garden) வனதமுல்லை இறங்கிவந்து தமது சிந்தனையை மாற்றும் போதிலேயே.

'செஞ்சக்தி' யின் இம்முயற்சி கொழும்பு நகரம் தொடர்பான சாவுக்கெதிராக யதார்த்த நிலைக்கு உங்களை அழைப்பதற்காகவே.

பொதுசன ஊடகங்கள் மூலம் வர்ணம் தீட்டப்பட்ட (பச்சை, நீலம்) கண்ணாடி அணிந்த கண்களுக்கு இது நாள்வரை தெளிவாக உண்மையை தென்படாத பல பாகங்கள் கொழும்பில் உள்ளது.

17வருட அநீதிமிக்க ஊழல் மலிந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு பொதுவாக இறுதி வணக்கத்தைத் தெரிவித்தது ஆயினும் தனியார் கம்பனிகளின் முதலீடு செய்வதன் மூலம் அதன் இலாபங்களில் தமது அரசியல் வாழ்வைப் பிடித்துக்கொண்டு கொழும்பு நகரசபையை அதிகாரத்தை கையல் வைத்திருப்பதற்கு யு.என்.பிக்கு முடியுமாயிருக்கிறது. நாலு ஐந்து துண்டுகளாக எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பொதுசன முன்னணி பிளவுகளும், போட்டியும பலவீனமும் கொண்ட நிலைமைகளின் உதவியோடு ஐக்கிய தேசிய கட்சி கொழும்பு நகர ஆட்சி அதிகாரத்தை தம்வசம் வைததிருந்தபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட திறந்த பொருளாதாரத்தின் நேரடியான பிடிக்குள் சிக்கியுள்ள கொழும்பு நகர வாழும் மக்கள் தூண்டப்படுகின்ற , பொதுமக்களின் எதர்ப்பு இன்று ஸ்தாபன ரீதியாக மத்திய அரசுக்கும், யு.என்.பி யின் நகரசபை அதிகாரத்திற்கும் எதிராக அணிதிரண்டவண்ணமிருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது சலுகைகள் பெற்ற வியாபார வகுப்பினர் இன்று எதுவிதமான குறைகளின்றி பொதுசன முன்னணி மத்திய அரசாங்கத்தின் கீழும் சலுகைகளை (முன்பைவிட) அனுபவிக்கின்றனர். ஆனால், மேல் மாகாண சபை பொதுசன முன்னணி அதிகாரமும் யு.என்.பி நகரசபை அதிகாரத்திலிருக்கின்ற மறைமுக எதிர்விளைவுகள் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் வசிக்கின்ற அரைவாசிக்கும் அதிகமானோர் சேரி வீடுகளில் வாழ்கிறார்கள் என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் உண்மை அதுவே இந்த சேரிவாழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருப்பது ஹோர்ட்டன் பிளேசிலோ, கிரகலி வீதியிலோ, ரெஸ்மிட் விளேசிலோ அல்ல. இவர்கள் தோட்டங்கள் வாரியாக கூடுதலாக செறிந்து வாழும் இடங்கள் வளாகமுல்ல டம்ப் தோட்டம் (பல்கஹ தும்புர), கொழும்பு (வடக்கு) சமித்புர, பாலதுறை மாவத்தை (சைபீரியா) பொகுணுவத்தை, மோதா கரையோர பிரதேசம், சில காலமாக நாட்டை ஆட்சி செய்த (?) பிரேமதாசாவின் வாஸஸ்தலமான மத்திய கொழும்பு உறுகொடவத்தை, சர்வதேச கொத்தாராம விளையாட்டுத்திடல் அருகில், தெமடகொட செவன தோட்டம் போன்றவற்றை இனம் காண முடியும். இந்த ஒரு தோட்டத்தில் மட்டும் 300-400 வீடுகள் உள்ளன. அதேவேளை (4-5 அடி சுற்றளவு இடங்களில்) 1500க்கு அதிகமான மக்கள் இச்சேரி வீடுகளில் வசிக்கின்றனர். இவர்கள் முகம் கொடுக்கும் அன்றாட பிரச்சினைகளில் தண்ணீர் பற்றாக்குறையே இவர்கள் முகம் கொடுக்கின்ற பிரதான பிரச்சினையாகும். போதிய தண்ணீர் வசதிகள் இல்லாது போலவே நீர்வலு (Capacity) போதாமையும், இவர்களின் இன்றைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்று. குடிப்பதற்காக ஒரு துளி நீர் இன்றி தவிக்கும் இவர்களுக்கு சிறு மழை பெய்தாலும் இந்த சிறிய சேரி வீடுகள் மழை நீரில் மூழ்கிவிடும் நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பு நகரில் வாழுகின்ற மக்கள் முகம் கொடுக்கும் மற்றுமொரு சிக்கலான பிரச்சினை மலசல கூட பிரச்சினையாகும். தமது மலத்தைக் கழிப்பதற்காக இருப்பது மாவல் டயல்ஸ் போடப்பட்ட மலசலகூடத்திற்குப் பதிலாக அவர்களுக்கு இருப்பது 'சொப்பிங்' பேக் என்றால் நம்புவீர்களா? 'செஞ்சக்தி' இக்கட்டுரையைத் தயாரித்தது நேரடியாக கண்டு கேட்ட உண்மை விடயங்களாகும். இளம் யுவதிகள்கூட தம்மைத் தள்ளப்பட்டிருக்கின்ற இக்கதிக்கு பழக்கப்பட்ட பழக்க வழக்கம் சுயமாக 'சொப்பிங்' பேக்கை பாவிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

சேரிவாழ் மக்களின் இப்பிரச்சினைகளுக்கு மேல் மாகாணசபையினாலோ, கொழும்பு நகரசபை மூலமாகவோ உறுதிமொழியைத் தவிர எந்தவிதமான தீர்வோ விடிவோ கிடைக்கவில்லையென்று ஒரு சேரி வாழ் பிரஜை கருத்து வெளியிட்டார். இச்சேரிகளில் வாழுகின்ற முதலாளித்துவ அரசியல்வாதிகளின் பிள்ளைகள் கல்வி கற்கும் ஆனந்த கல்லூரியோ, நாலந்தா கல்லூரியோ, றோயல் கல்லூரியிலோ வசதிகிடைப்பதில்லை. எப்படியாயினும் பெயரை எழுதுவதற்குக் கூட உரிமையின்றி தவிக்கின்றார்கள். போதைவஸ்து (ஹெரோயின்) சிறுவர் விபச்சாரம் போன்றவை அவர்களுக்கு உரியவை. சிறு கொள்ளைகள் முதல் பெரும் கொள்ளைகள் வரை களவாடுதலில் தேர்ச்சி பெறுகின்றனர். பெண்களுக்கு விபச்சார தொழிலிலும், ஆண்களுக்குப் பாதாள உலக சண்டித்தனத்தைத் தவிர நிரந்தரமான தொழில் இவர்களுக்கு உரியவையல்ல.

கொழும்பில் அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் அனைவரும் இவைகளைப்பற்றி நன்றாகத் தெரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு இந்நிலமையை மாற்றவேண்டிய தேவையில்லை. ஏனென்றால், அடுத்த தேர்தலில் தமது பதவியைப் பாதுகாத்துக்கொள்வதென்றால் இந்த வறிய மக்கள் இவர்களுக்குத் தேவை. அவர்களுக்கு இம்மக்களே மேடைகளில் விற்பதற்கு வார்த்தைகளை கொடுத்துதவுகின்றனர். முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்குத் துதி பாடவும் எதிர்தரப்பினரைக் கொல்வதற்கும் பாதாள கோகூஷ்டியை கொண்டுள்ளவர்கள் இவர்களே.

ஐக்கிய தெசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளின் மூலம் துளிர்விட்டு வளர்ந்த கொழும்பு நகர சேரிகள், முடுக்குகளில் வளர்ந்துவந்த இம்மக்களின் வாழ்க்கை முறமை இன்று அரசியல் அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக விற்பனைக்கு உள்ளாகியிருக்கின்றது. தேர்தலொன்று நெருங்கும்போது முதலாளித்துவ அரசியல் வாதிகள் பிலாப்பழத்தை சூழும் வௌவால்களைப் போல் இத்தோட்டங்கள், சேரிகளில் அலைந்து திரிவதைக் காண முடியும்.

அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் பச்சை, நீல நிற இரண்டு கட்சிகளினால் போதிய சுகத்தைத் தராத இன்று தமது 'அதிகார முறைமையை' தேர்ந்தெடுக்கின்றனர். பிற்போடப்பட்ட மாகாணசபைத் தேர்தலின் போது சேரிகளுக்குள் ஒட்டு கேட்பதற்கும் வாக்குகொள்ளை நடத்துவதற்கும் சென்ற அரசியல்வாதிகளுக்கு அனுபவிக்க நேர்ந்ததோ அவர்களது பாணியிலான கெட்ட வார்த்தைகளும், அழகிய முட்டைகளே, அந்த 'அதிகார முறையின்' உதாரணங்களாகும். அதற்கும் அப்பால் செல்லும் செயற்பாட்டு மிக்க வேளைகளும் தம் கைவசம் இருப்பதாக நாம் வினவியபோது 'சேரிவாழ் மக்கள் கட்டமைப்பின்' ஒரு பிரதிநிதி எமக்குக் கூறினார். கொழும்பு நகரில் அடிப்படையாகக் கொண்டு தோட்டங்கள் வாரியாக தோறும் இவர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு எழுச்சிமிக்க ஆர்ப்பாட்டத்திற்கான விடையைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். ஏமாற்றத்திற்கும், படிப்பறிவின்மைக்குள் இன்னும் எவ்வளவோ துன்ப நிலைக்குத் தள்ளப்ப்டிருக்கும் இம்மக்களின் உதவியோடு அதிகார பீடத்தில் இருக்கின்ற இந்த நயவஞ்சக அரசியல்வாதிகளிடமிருந்து இவர்களை மீட்டெடுக்காமல் 2001ம் ஆண்டில், மிச்சப்படுவது உல்லாச கதைகளிலான கொழும்பு நகரம் மாத்திரமேயாகும்.

## ஜே.வி.பி காரர்களுக்கு தொழில் வழங்க மறுக்கும் பவுசி

1996ம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு உயர்த்திய 4வீத சம்பள உயர்வும் 1998 ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்த வேண்டியிருந்த 60வீத சம்பள உயர்வு இன்றுவரை போக்குவரத்துச் சேவை ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை. இச்சம்பள உயர்வை கோரி கொத்தணி கம்பனிகளின் ஊழியர்கள் ஆகஸ்ட் 12ம் வேலை நிறுத்தமொன்றை ஆரம்பித்தனர்.

இவ் வேலை நிறுத்தத்தைச் செய்வதற்கு போக்குவரத்து 'டிப்போக்களில்' இயங்கும் எல்லா தொழிற்சங்கங்களும் உடன்பட்டு இப்போராட்டம் ஆரம்பித்தபின்பு சில தொழிற் சங்கங்கள் போராட்டத்தை சீர்குலைக்கின்ற நாசவேலைகளில் ஈடுபட்டதினால், டிப்போகளுக்கிடையே தொடர்புகள் சரிவர இல்லாததினாலும் இவ் வேலைநிறுத்தத்தை நாசமாக்குவதற்கு டிப்போ நிர்வாகத்திற்கு முடியுமாயிருந்ததென கலந்துகொண்ட ஊழியர்கள் குற்றம் சுமத்தினர்.

இதேவேளை போக்குவரத்து அமைச்சும் 14ம் திகதி பகல் 12 மணிக்கு முன்பு சேவைக்கு வரும்படியும், அவ்வாறு வராதோர் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களாகக் கணிக்கப்படுவர் என்று அறிக்கை விட்டது. அறிக்கை விட்ட பின் 1500 ஊழியர்கள் தொழில் இழந்தோர்களாக கடிதங்களை அனுப்பிவைத்து, மட்டக்குளிய (கொழும்பு) டிப்போவை முற்றாகவே மூடிவிட்டனர்.

நியாயமான முடிவுகளை வழங்கும்படி கேட்ட சில ஊழியர்களுக்கு அமைச்சர் எச்.எம்.பவுசி கூறியதாவது, ஜே.வி.பி காரர்களுக்கு கொடுப்பதற்கு என்னிடம் வேலை இல்லை என்று கூறியுள்ளார். வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட ஊழியர்கள் மத்தியில் இக்கூற்று பாரிய வெறுப்பும் எதிர்ப்பும் நிலவுவதாக தொழிற்சங்கப் பிரிவு தகவல்கள் செஞ்சக்திக்கு தெரிவித்திருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



## வட – கிழக்கில்... 1ம் பக்கத் தொடரச்சி

பெற்றுக் கொடுத்திருப்பதினாலும், அவர்களின் ஆதரவை பொ.ஐ.மு பால் வைத்திருப்பதற்காகவும் பொதுசன முன்னணி ஐ.தே.க. ஆகிய இரு கட்சிகளும் இவர்களை கொள்கைகளைப் பின்பற்றுவதாக தெரிகிறது. ஐ.தே.கட்சியே இவர்களுக்கு முதலில் ஆயுதம் உட்பட மற்றயை சலுகைகளையும பெற்றுக் கொடுத்து மக்களை ஒடுக்கும் முறைமையை பயிற்றுவித்தவர்களாவர். ஆட்சி மாறும் கால கட்டங்களில் இவர்களது ஆதரவு தொடர்ந்தும் தமக்குத் தேவையென்பதால் இப்போதும் ஐ.தே.க இவர்களுக்கு ஆதரவாகவே உள்ளது.

எப்படியாயினும் சர்வதேச 'எம்னெஷ்டி' அமைப்புகளிடமிருந்து வந்துள்ள எதிர்ப்பை கவனத்திலெடுக்காது, இந்தக் கொலைகாரக் கும்பல்களுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வரும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அனைவரும் வன்மையாகக் கண்டிக்கவேண்டும்.

## நேர்தல் நடைவரும். 1ம் பக்கத் தொடரச்சி

ஆதரவாக நேரடி, மறைமுக விருப்பத்தை ரணில் ஆரம்ப முதல் தமது கருத்துக்களை வெளியிட்டிருப்பதால் ஐ.தே.க யிற்கு சாதகமான பலனைத் தராது என சட்டவல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இக்காரணத்தினாலேயே ஐ.தே.க. யின் சிரேஷ்ட சட்டத்தரணி சொக்ஸி முன்வாராத காரணமும் இதுவாகுமென ஐ.தே.க. அந்தரங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 8ம் பக்கத்தொடர்ச்சி இந்தியா.

பொருப்பானவர்களும் வழிகாட்டிகளும் வேறு யாருமல்ல. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமேயாகும். (பொ.ஐ.மு) உள்ளிட்ட

இவ்வாறு தொடர்ந்து இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டமான் உள்ளிட்ட மலையக தொழிற்சங்கங்கள் என்ன செய்தன? இந்த இனக்கலவர ஸ்தாபகர்களாக ஐ.தே.க. பொ.ச.முன்னணிக்கு எதிராக இவர்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

180 வருடங்களுக்கு மேலாக இம்மக்களின் உழைப்பையும் இரத்தத்தையும் உறிஞ்சிக் குடிக்கும் இந்த நயவஞ்சக முதலாளித்துவ கட்சிகளுக்கு எதிராகவும், இம்மக்களின் உரிமை சுதந்திரத்தைப் பாதுகாக்க இவர்கள் இதுநாள்வரை செய்தது என்ன?

*பதில் ..... இல்லை... இல்லை...*

இம்மக்களைப் பாதுகாப்பதல்ல இவர்களது கடமை. தம்மையும் தமது குடும்பத்தையும பாதுகாப்பதே இவர்களது தலையாய கடமைகளாக இருந்து வருகின்றது. தொழிலாளர்களின் சந்தாப் பணத்தை விழுங்கி, மக்கள் மீதேறி குதிரை சவாரி செய்து உல்லாச வாழ்வை நடத்துவதே இவர்கள் இம்மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த நன்மைகளாகும்.

*சிந்தித்து அணிதிரள வேண்டும், ஸ்தாபனப்படவேண்டும்!*

180 வருடத்திற்கு மேலாக வஞ்சிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைப்பது யார்? 180 வருட கால அடிமை வாழ்வு இன்று மலையக இளைஞர் யுவதிகளின் கொழும்பு நகரில் பணக்கார வீடுகளிலும் தேனீர் கடைகளில் நவீன கொத்தடிமைகளாக வாழும் வாழ்வை மீட்டு விடிவைத் தேடிக்கொடுப்பது யார்?

ஆம்! நாம் இது தொடர்பாக மலையகத்தில் இயங்கும் ம.வி.மு கட்சியின் பிரதிநிதியொருவரிடம் கேட்டபோது ' தொழிற்சங்க ஏமாற்றுப் பேர்வழிகளிடமிருந்தும், முதலாளித்துவ ஐ.தே.க. பொ.ஐ.மு சுரண்டல்வாத ஆட்சியாளரிடமிருந்தும், பேரினவாத அரசியல் வாதிகளிடமிருந்தும் மீள்வதற்காக வர்க்க ரீதியில் அணிதிரளவேண்டும். ஒடுக்கப்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களோடு கைகோர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக மக்களுக்காக போராடும் உண்மையான வர்க்க தேவையோடு செயற்படும் இயக்கத்தின் தலைமையின் கீழ் அணிதிரளவேண்டும். அவ்வாறு செயற்படுவதன் மூலமே இந்த மக்களை ஒடுக்குவோரின் அட்டகாசத்தை அழித்தொழிக்க முடியும் என்று அவர் கூறினார்.

ஆம் அடிமை அடிமை என்று உணராதவரையில் அவனது விடுதலை கேள்விக்குறியானதாகும். எனவே இந்தச்

சுரண்டல் அமைப்புக்கு எதிராக தொழற்சங்க சந்தாக்காரர்களுக்கு எதிராக அணிதிரள்வோம் ஸ்தாபனப்படுவோம். கொடூர அடக்குமுறை தகர்த்தெறிவோம்!

## இடதுசாரி கூட்டுறிகடனம். 4ம் பக்கத்தொடர்ச்சி

இன்றைய ஐக்கிய நடவடிக்கையில் தொடர்ந்து பங்குபற்றிக் கொண்டிருக்கும் பொழுது நாம் மிக விழிப்பாக இருக்க வேண்டிய கட்டாயமும் உண்டு. நாங்கள் உடன்படக்கூடிய விடங்கள் தொடர்பாக ஐக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்ககூடிய அதே நேரத்தில் ஐக்கியப்பட்ட போராட்டங்களுக்கு சித்தாந்த ரீதியான வேறுபாடுகள் தடைக்கல்லாக இருக்க வேண்டியது இல்லை இதன் இடையில் சித்தாந்த ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக சதாகமான முறையிலான கலந்துரையாடல்கள் நடத்தப்படும். இத்தகைய புரிந்துணர்வும் பொதுப்போராட்டங்களுக்கான உறுதிப்பாடும் எமது ஒன்றிணைந்த பொதுப் போரட்டங்களுக்கு பலத்தினை அளிக்கும் சமுதாயத்தினதும் மக்களினதும் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு நாம் தயாராக இருப்பதால் எமது பொதுப் போராட்டங்கள் வெற்றியீட்டும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. எனவேதான் இந்த நாட்டில் உள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களும் புத்திஜீவிகள் கலைஞர்கள், தொடர்புசாதனவியலாளர்கள் மற்றும் முற்போக்கு அமைப்புகள் இந்த பணியில் இணைந்து இதனை வெற்றி அடையச் செய்வதற்கு கை கோர்த்தது முன்னேற வேண்டுமென நாம் இதய சுத்தியுடன் அழைக்கிறோம்.

## மலிழு மாவட்ட மாநாடு. 1ம் பக்கத்தொடர்.

இக்கிளை மாவட்ட மாநாட்டுக்கு எல்லா மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் 5000 அங்கத்தவர்கள் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டிக் குழு முடிவு செய்திருக்கின்றது.

# சதித்திட்டம் ! விழிப்பாயிருங்கள்! அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் சந்தேகம்!

மின்சார மத்திய நிலையங்களை தனியார் மயமாக்குவீர்களா? என பத்திரிகையாளர்கள் ஜீ.எல்.பீரிஸிடம் கேட்டபோது அதற்கான விடையை இப்போது கூறமுடியாதென அவர் விளக்கமளித்துள்ளார்.

ஜீ.எல்..ன் இந்த அறிக்கை தொடர்பாக சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் கூறியதாவது, பொறுப்பு வாய்ந்த அரசாங்கமொன்றில் பொறுப்புமிக்க அமைச்சரொருவர் தமது அரசாங்கம் என்ன செய்கிறதென்று தெரியாமல் செயற்படுவதினால், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி விழிப்பாய் இருக்க வேண்டுமென்றும், திருடன் மீதுள்ள சந்தேகப்பார்வை இந்த அரசாங்கத்தின் மீதும் செலுத்தவேண்டுமெனவும் மேலும் மக்களுக்குச் சொந்தமான வளங்களைத் திருடுவதற்கு சந்தர்ப்பத்தையும் மக்களுக்கு எதிரான அதிக சூழ்ச்சிகளில் ஈடுபடுவதை தடுத்து நிறுத்துவதற்காக நல்ல முறையில் ஸ்தாபனப்பட வேண்டுமென மேலும் அவர் கூறினார்.

'பர்க்' அமைப்பின் மூலம் உலக வங்கியின் தென்னாசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பான உபதலைவர் ஜோசப் .டி.வுட் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் .(1996.02.08) அறிக்கையின்படி விற்கப்படவேண்டிய அரச நிறுவனங்கள், இலங்கை மின்சார கூட்டுத்தாபனம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் , பொஸ்பேட் கனிவளம் உட்பட மேலும் மக்களுக்குச் சொந்தமான பெறுமதிமிக்க வளங்களை விற்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனவே, இந்த அநீதியைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக மக்கள் அணிதிரண்டு ஸ்தாபனரீதியில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு தயாராக வேண்டும்.என அவர் கூறினார்

## 2ம் பக்கத் தொடர். பொலிஸாரின் பொய்.

ஆநந்தாவும், மதுபானச்சாலையில் தொழில் புரிகின்ற லால் உட்பட இனம் தெரியாத பலரும் 57-6530 இலக்கத்தைக் கொண்ட வேனில் வந்த மேற்குறிப்பிட்ட தோழர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அத்தோடு நிற்காத இக்காடையர் அருகிலிருந்த அபிவிருத்தி லொத்தர் நிலையத்தை தீவைத்து நாசமாக்கி விட்டு இதை செய்தவர் தோழர் ரொஷான் லியனகே என்று பொலிஸில் முறைப்பாடு செய்து பொலிஸ் நிலைய அதிகாரிகள் முன்னால் மீண்டும் இவரை கடுமையாக தாக்கியுள்ளனர். இந்த காடையர்களின் கடுமையான தாக்குதலைக் கண்டித்து ம.வி.மு தோழர்கள் அப்பிரதேசத்தில் 98.02.08 திகதியன்று வீடுவீடாகச் சென்று இந்நிலைமைகளை விளக்கி அன்று மாலை கஹபிலியாகந்த சந்தியில் எதிர்ப்பு கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

ம.வி.மு. தோழர்கள் செய்த முறைபாட்டைக் கவனத்தில் கொள்ளாத பொலிஸார் பி.சபை உபதலைவரின் பொய் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர். வழக்கு இல:675 பலபிட்டிய நீதிமன்றம்) 1998.08.19 தினத்தன்று நடைபெற்ற வழக்கில் முடிவு பொய் வாக்கு மூலமளித்தற்கு குற்றவாளியான சரத் ஆனந்தாவுக்கு அபராதத்தை செலுத்தும்படி தீர்ப்பாகியது.

பிரதேசத்தில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையிட்டு வெறிபிடித்துள்ள பொ.ஐ.மு.காடையர்களின் இருப்பை பாதுகாத்துக்கொள்வதற்காக வன்முறையில் ஈடுபடவம் பொய்க் குற்றங்களை சுமத்துவதும் பொதுசன முன்னணியின் வங்குரோத்து மிகுந்த ஜனநாயகத்தின் நிர்வாணம் வெளிப்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# 'குழந்தைகளின் உலகத்திற்கு உயிர் கொடுப்போம் !'





மாத்தளை நாலந்த மகா வித்தியாலயம் மிக வனப்பான பிரதேசத்தை பரந்து கிடக்கும், ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் கல்வி கற்று பாடசாலையாகும். அதற்குப் பின்னால் பாரியதோர் வாவி ஒன்று இருந்தாலும், இப்பாடசாலை மாணவர்கள் குடிப்பதற்கு தண்ணீரை பெற்றுக்கொள்வதற்கு வழியிருக்கவில்லை. எனவே , மக்கள் விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி உறுப்பினர் நிதியத்திலிருந்து 1 லட்ச ருபாய்க்கு மேல் செலவழித்து கடந்த 09ம் திகதி பாடசாலைக்கு குடிநீர்பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டது. மிகப்பெரியதோர் நீர் தாங்கி ஒன்றை நிர்மாணித்து, ஒரு மோட்டரின் மூலம் தாங்கிக்கு தண்ணீரை நிரப்பி, பாடசாலை பூமியெங்கும் தண்ணீர் வழங்கக்கூடிய பெரும் திட்டத்தை குறுகிய காலத்தில் நிர்மாணித்து கொடுப்பதற்கு , மக்கள் விடுதலை முன்னணி மாத்தளை மாவட்ட அங்கத்தினர்களால் முடியுமாயிருந்தது.

கடந்த 09ம் திகதி சிறிய வைபவத்தோடு, இந்த நீர்தாங்கி திட்டத்து திறப்புவிழா நடைபெற்றது. இவ்வைபவத்துக்கு ம.வி.மு. பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவஸ்ச அவர்களதும் மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவம செய்யும் பிரதேசசபை உறுப்பினர்களும், மாத்தளை மாவட்ட ம.வி.மு அமைப்பாளர் தோழர் ரோஹித திலகரத்ன அவர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். இவ்வைபவத்தில் பெருந்திரளான பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். நடைபெற்ற திறப்புவிழா வைபவத்தில் பேசிய மாத்தளை நாலந்த மகாவித்தியாலய அதிபர், இந்த பாரிய முன்னுதாரணத்தை சுட்டிக்காட்டினார். 'பட்டதாரி ஆசிரியர்கள், கல்விப் பணிப்பாளர்கள் என வேலை செய்யும மதிப்பு மிகக்வர்கள் பலர் இவ்வேலைத்திட்டத்தைச் செய்து முடிப்பதற்கு உழைத்ததை என் இரு கண்களால் கண்டேன். அது நம்பமுடியாத படிப்பினையும், முன்னுதாரணமுமாகும்' எனக் கூறினார்.

மேலே படத்தில் அதிபர் பேசுவதும், ஆசிரியர் மாணவர்கள தண்ணீர் குடிப்பதையும் காண்கிறீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com


# செஞ்சக்தி

198 – 19 பஞ்சிகாவத்தை வீதி கொழும்பு 10. 345594 ந – அயடை – தொலைஅரப ஊடவட்டம

மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச தலைமைபீடத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்



☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11, FRANCE,
FAX: 0033 1 40330414
☆ P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312
☆ E-MAIL-JVP @ i bekkoame.or.jp


ஒருவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்பதைக்கொண்டு நாம் அவனை மதிப்பிடமாட்டோம். அதுபோல் புரட்சி சகாப்தத்தை அதன் உணர்ச்சியைக்கொண்டு நாம் மதிப்பிடமாட்டோம். ஆளும் வர்க்கத்திற்கு எதிராக ஒரு வர்க்கம் என்ற முறையிலே தொழிலாள வர்க்கம் நடத்தும் போராட்டம் அரசியல் போராட்டமாகும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலை செய்யும் தாங்கள் வேலை நேரத்தைக் குறைக்கும்படி முதலாளிகளை வேலை நிறுத்தத்தின் மூலம் நிர்ப்பந்திப்பது பொருளாதாரப் போராட்டமாகும். ஆனால் 8மணிநேர வேலையை சட்டமாக்குவதற்காகவே தொழிலாளி நடத்தும் போராட்டம் அரசியல் போராட்டம் ஆகும். தனிப்பட்ட போராட்டங்களிலிருந்து அரசியல் போராட்டம் பிறக்கும் முதலாளித்துவ தனிச் சொத்துடமை முறையின் சாவு மணி கேட்கும். சுரண்டுபவர்கள் சுரண்டப்படுபவர்கள்

காரல் மார்க்ஸ்

## பேச்சுவார்த்தை இனிமையானது? லாபகரமானது

யுத்தம் நடந்துகொண்டிருக்கும் ஒரு நாட்டில் அதிசமான தேவை இருப்பது வேறு எதற்கும் அல்ல. சமாதானத்திற்கே 'யுத்தத்தைத் தொடர்ந்து செய்!' என்று வாய் கிழிய கத்துவோரின் கருத்தும் யுத்தத்தின் மூலம் சமாதானத்தை வென்றெடுக்க வேண்டுமென்றேயாகும். 'பேச்சுவார்த்தை நடத்து!' என்று சொல்வோரும் பேச்சுவார்த்தை மூலமே சமாதானத்தை வென்றெடுக்க முடியுமென்று எப்படியாயினும் இவர்கள் இருவரின் கருத்தும் சாமாதானம் தேவை என்ற கருத்தையே முன்மொழிகின்றனர். அரசாங்கமும் இவ்விருவர்களையும் திருப்தி செய்வதற்காக யுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் இடையிடையே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. அதன் 5லம், சமாதானத்திற்காக யுத்தமும், சமாதானத்திற்காக பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடுவது முதலாளித்துவ அரசாங்கத்தின் திட்டமாகும்.

அரசாங்கம் யுத்தத்திற்கு கூடுதலான கவனத்தைச் செலுத்தும்போது, அதற்கு ஆதரவாளர்கள் ஆனந்தத்தில் மூழ்கி கரகோஷமெழுப்புகின்றனர். ஆம்... அதே வேளை அரசாங்கத்திலும் பேச்சுவார்த்தையைக் கேட்டும் அப்பாவிகளையும் மறக்காது நாம் 'பேச்சுவார்த்தையை தொடர்வோம்' என்று கூறி அந்த அப்பாவிகளையும் ஆறுதலடையச் செய்யும் அளவுக்கு அரசாங்கம் மென்மையானது.

இப்பொழுது தேசிய பிரச்சினையோடு இணைந்த அரசியல் நாடகத்திற்த மீண்டுமொருமுறை பேச்சுவார்த்தை கட்டத்திற்காகதிரையும் பின்னணியும் தயார்செய்த வண்ணமுள்ளனர். ஜனாதிபதி ச.ப.கு அம்மையார், நெல்சன் மண்டெலாவின் 'விடுதலை' என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார் செய்து இப்போது அறிவித்துள்ளார். இதேவேளை ரணில் விக்கிரமசிங்க நிபந்தனையற்ற பேச்சில் ஈடுபடவேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்துகின்றார். யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போதே நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையும் ஈடுபட வேண்டுமென அவர் கூறுகிறார். ஆனால், அரசாங்கம் தனது அரச ஊடகங்கள் மூலம் அடிப்படையில் இக்காரணிகள் அனைத்தும் பேச்சுவார்த்தை என்ற மாபெரும் கோஷத்திற்கு முழு நாடே உள்வாங்கியவண்ணம் இருக்கிறது.

யுத்தமா, பேச்சுவார்த்தையா என்ற குறிப்பிட்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இரு வழிகளே உள்ளன. யுத்தமென்பது வன்முறைமிக்க வழியாகும். சமாதானம் என்பது அமைதி வழியாகும். இலங்கையில் இவ்வாறு தேசிய பிரச்சினை உக்கிரமடைவதற்கான அடிப்படையான காரணம் இவ்வழிமுறைகளின் பிரச்சினை அல்ல. பிரச்சினையை முன்னெடுத்துச் செல்லும் வழிமுறைகளின் ஊடே பிரச்சினையை உக்கிரமடையச்செய்திருப்பது போலவே, அரசாங்கத்தின் கொள்கைகளின் மூலமேயாகும். எந்தவொரு முதலாளித்துவ அரசாங்கமாயினும் தேசிய பிரச்சினை என்று காண்பது நன்மை அடையும் அதேயே குறிக்கோளாகக் கொண்டு (சாதக) கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே. முதலாளித்துவ முறமைக்கு இலங்கையில் தேசிய பிரச்சினையென்பது மாபெரும்புதையலாகும். அது நீடிக்கும் வரையில் அதை நிறுத்துவதாகக் கூற முடியும். அதை நிறுத்தப்போவதாகக் கூறிக்கொண்டு யுத்தத்தைத் தொடர முடியும். யுத்தத்தை காரணம் காட்டி மக்களது வயிற்றுக்கு அடிக்க முடியும். அடக்குமுறையை சமுகத்தின் அனுமதியுடன் கட்டவிழ்த்துவிடமுடியும். தேவையேற்படும்போது சமாதான தேவதையாகவும், தேவையின்போது புத்திரி குமாரனாக தமது போலி உருவத்தை கல்லாக மாற்றிக் கொள்ள முடியும். இவ்வாறு மாபெரும் அதிர்ஷ்டத்தைத் தோற்றுவித்திருக்கும் தேசிய பிரச்சினையை தீர்ப்பதென்பது தமது சவக்குழியைத் தோண்டிக் கொள்வதென்ற உண்மை மற்ற எவரையும் விட நன்றாக புரிந்துகொண்டு வந்திருப்பவர் முதலாளித்துவ தலைவர்களேயாவர்.

ஆனால், இவ்வாறான முதலாளித்துவ தலைவர்களிடம் போய் யுத்தத்தைச் செய்து பிரச்சினையைத் தீர்!. எனக் கேட்கும அரசியல் கோமாளிகளுக்கு இது புரியாது. 'இல்லை....இல்லை... பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைத் தீரு...!' என்று அதற்கு மாறாக கோரிக்கை விடும் சமாதான அரசியல் அப்பாவிகளுக்கும் இது புரியாது. இந்த இரு சாராரையும் ஆட்டுவித்து, ஆனந்தத்தில் மூழ்கடித்து அரசாங்கம் தேசிய பிரச்சினையை விற்று வயிறை நிரப்புகின்றது. பிரச்சினை இருப்பது அடிப்படை காரணத்தை கைவிட்டுவிட்டு, பிரச்சினையை தீர்க்கும் வழிமுறைகளைப்பற்றி அதைச் செய்ய முடிவது நிபந்தனையுடனா? நிப்நதனையில்லாமலா? போர் காரணிகளின் போலி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கின்றனர். இந்த பெரும் கோஷத்திற்கு (பொறியில்) சமாதானவாதிகளும், யுத்தவாதிகளும் அகப்படுகின்றார்கள். மென்மேலும் வளர்ந்து சுகமாக வாழ்ந்து வருவார்கள்.

இதைத் தவிர வேறு என்ன நடைபெறப்போகின்றது? 'பேச்சுவார்த்தை... ஆஹா! என்ன இனிமை? ' அல்லவா என்று எம்மிடம் கேட்கும் குழந்தைகளுக்கு எமக்கு கூறவிருப்பது இதுவே. இனியதாக இருக்க வேண்டிய கொள்கையாகும். கொள்கையை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளில் அல்ல வழிமுறைகள் இனிதாக இருப்பினும், கொள்கை பிரச்சினையை வளர்த்து தின்பதென்றால் வழிமுறைகளுக்கு ஒரு தலைமையினையும் பிடுங்க முடியாது. ஆகவே, கொள்கையை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளில் தொங்கி ஓடும் அரசியல் குழந்தைகளுக்கு நாம் கூறுவதெல்லாம் ஓடி களைத்துப் போனவுடன் பின்னோக்கி பறக்கும்படியேயாகும். ஆனால், அதை செய்ய முதுகெழும்பு இருக்கவேண்டும்

# இரத்தினபுரி இரத்தகலரிக்குப் பின்னால் அரசியல்வாதிகள்?

இம்மாதம் 09ம் திகதி அன்று இரத்தினபுரி மாவட்டத்தில் வேவல்வத்தை, அருலப்பொல டிவிசனை சேர்ந்த தோட்ட இளைஞர்களுக்கும், அப்பிரதேசத்தைச் சேர்ந்த கசிப்பு வியாபாரிகளுக்குமிடையே ஏற்பட்ட வாய்தர்க்கம் இறுதியாக இரண்டு சிங்கள இளைஞர்களின் கொலையில் முடிவுற்றது. கொல்லப்பட்டவர்கள் வல்ஹேனகே பந்துசேன (38) அசித்தகுமார (25) ஆகும்.

இதைத் தொடர்ந்து இரத்தினபுரியிலிருந்து 3 மைல் தூரத்திலிருக்கும் அளுப்பொத்தை தோட்டத்தைச் சேர்ந்த 20 க்கும் அதிகமான லயன்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஏறத்தாள 1000க்கும் அதிகமானோர் கூட்டமாக வந்தே இவ் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். நான்கு கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டும், பலர் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர். அத்தோடு நிறுத்தாத இவ்வெறியர்கள் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது.

*தொடர்ந்த வெறியாட்டமும் !*

*அரசியல்வாதியின் ஆவேச பேச்சும்*

கொலைசெய்யப்பட்ட இரண்டு சிங்கள இளைஞர்களை வைத்தியசாலையில் பார்வையிடச் சென்ற இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு தூண்டும்படியான பேச்சுகளை பேசியதாக தெரியவருகிறது. இந்த இனத்துவேஷ வார்த்தைகளைச் செவிமடுத்த கூட்டம் தொடர்ந்து கசிப்பு கூட்டத்துடன் சென்று அப்பிரதேசத்திலிருக்கின்ற பல தோட்டங்களில் அப்புகஸ்தென்ன மரத்தோட்டம், ராசகல, வேவல்வத்த, கலபட உட்பட இன்னும் பல தோட்ட 20 டிவிசன்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளைத் தீயிட்டு, சூறையாடி, குடியிருப்புக்கள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டு 4000 த்திற்கு அதிகமான தொழிலாளர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இதில் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்து இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் இன்னும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். மேலும் பலர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் மரணமானார்.

முழுமையான எரித்து நாசமாக்கப்பட்ட பிரதேசங்களில் பிணவாடை வீசுவதாகவும், அப்பிரதேசங்களில் இன்னும் இன்னும் பதட்டம் நிலவுவதாகவும் தெரியவருகின்றது.

*யாருக்கு ஊரடங்கு ?*

நிலமையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்காக சனி ஞாயிறு நாட்களில் ராணுவத்தையும் பொலிஸ்சாரரையும் வரவழைத்து மாலை 6. முதல் மறுநாள் காலை 6 மணி ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தினர். இதையும தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய அப்பிரதேச குண்டர்கள் தொடர்ந்தும் இவர்களின் முன்னிலையிலேயே தங்களது வெறியாட்டத்தை தமிழ் மக்கள் மீது ஏவினர். இராணுவம் வானை நோக்கி சுட்டு நிலமையைக் கட்டுப்படுத்திய போதிலும் சில பிரதேசங்களில் காடையர்களின் கைகளே மேலோங்கியிருந்ததாகத் தெரியவந்தது.

*அரசின் நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் மலையக தொழிற்சங்க, அரசியல்வாதிகள்!*

நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இன்றுவரை திரும்பிப்பார்க்கும்போது, பேரினவாதிகளின் இனத்துவேசத்திற்கும் வெறியாட்டத்திற்கும் பலியாகியிருப்பது தோட்டத் தொழிலாளர்களேயாகும். குறிப்பாக 1956, 58, 77, 79, 81, 83, 84 போது நிகழ்ந்த மிருகத்தனமான காட்டேரிகளின் இன வன்செயல்களுக்கு மலையக தொழிலாளர்களே பெருமளவில் இரையானார்கள். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ்வன்செயல்களுக்கு

7ம்பக்கம் பார்க்க.....

## தொடரும் நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னியில் ஆர்ப்பாட்டப் பேரணி!

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தொடரும் வன்னிப் பிரதேசத்திற்கான உணவு நிவாரண வெட்டை ஆட்சேபித்துக் கடந்த 18ம் திகதி வெள்ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பேரணியும் நடைபெற்றது. கிளிநொச்சி, ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள் சந்தியிலிருந்து மல்லாவியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரக அலுவலகத்திற்கு 1500 இற்கு அதிகமான சைக்கிள் ஊர்வலம் சென்றது.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் ஐக்கிய நாடுகள் தூதுவருக்கும், ஐக்கிய நாடுகள் செயலாளருக்கும் இரண்டு மகஜர்களை அங்குள்ள ஐக்கிய நாடுகள் பிரதிநிதியிடம் கையளித்தனர்.

வன்னியில் பட்டினிச் சாவை எதிர்நோக்கி அல்லற்படும் அப்பாவி மக்களுக்கு வழங்கப்படவேண்டிய உணவு நிவாரணத்தை வெட்டாது முழுமையான நிவாரணத்தை வெட்டாது மக்களுக்குப் பெற்றுக்கொள்ள வழி செய்யுமாறு அம்மகஜரில் கோரப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பெரும் திரளான மக்களும், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி நிறுவன ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இப்போது 53 வது ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடருக்கு சென்றிருக்கும் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா அம்மையாருக்கும் இது தெரியவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளுக்கு உணவு செல்வதைத் தடுப்பதாகக் கூறி வன்னி-யாழ் மக்களை நிவாரண வெட்டு என்ற பெயரில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இச் செயல்களினால் பாதிக்கப்படுவது அப்பாவி மக்களேயாகும்.

எனவே இச்செயலை 'செஞ்சக்தி' வன்மையாகக் கண்டிப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை உரிய முறையில் உரிய நேரத்தில் தாமதமாக்காது பெற்றுக் கொடுக்கும்படி பொதுசன ஐக்கிய முன்னணியை வற்புறுத்தி கேட்கிறது.

மேலும் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எனக் கூறிக்கொண்டு அப்பாவி மக்களைப் பட்டினி போடாதே! இவ்வாறு செய்வதன் மூலம் பலமடையப் போவது பிரிவினைவாதிகளின் கரங்களேயாகும். அவ்வாறு பிரிவினைவாதிகளின் கரங்கள் பலமடையும் போது மென்மேலும் பாதிக்கப்படப்போவது அப்பாவி மக்களேயாகும்.

அதேவேளை, அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகளுக்கும் பிரிவினைவாதிகளின் பிற்போக்கு நடவடிக்கைகளையும நல்ல முறையில் மக்கள் இனம் காண வேண்டும். அல்லாவிடில், எதிர்காலத்தில் வட-கிழக்கில் மாத்திரமல்ல, முழு நாட்டு மக்களும பட்டினியால் சாவது எவராலும் தடுக்க முடியாது போகும்.

## மத்திய வங்கிக்கு ஊழியர்கள் வெளிநாட்டிலிருந்து !

இலங்கையில் மிகப்பெரிய பொருளியல் விஞ்ஞான நூலகம் அமைந்திருந்தது மத்திய வங்கியிலாகும். 1996ம் ஆண்டு எல்.ரீ.ரீ.ஈ குண்டு வெடித்தபொழுது யாழ்ப்பாண நூலகத்திற்கு ஏற்பட்ட கதி இந்த வங்கி நூலகத்திற்கு ஏற்பட்டது. அதேவேளை கட்டிட தொழில் நுட்ப பிரிவின் சர்வதேச ஏஜண்டுக்கும் நல்லதோர் வாய்ப்பு கிடைத்தது. அதுதான் மத்திய வங்கியை மீண்டும் கட்டியெழுப்புவது. கொந்துராத்தை பொறுப்பேற்ற ஓர் ஜேர்மன் கம்பனி அதில் சிலவற்றை உப கொந்துராத்துக்களை மேலும் சில சர்வதேச கம்பனிகளிடம் ஒப்படைத்தது. ரூமேனிய கம்பனியும் அதிலொன்றாகும். ஆனால் அவர்கள் தொழிலாளர்களைத் தருவித்து ரூமேனியாவிலிருந்து. ஒரு ரூமேனிய தொழிலாளிக்கு நாளொன்றுக்கான சம்பளம் 3360.00 இலங்கை தொழிலாளி ஒருவருக்கான நாள் சம்பளம் 260.00 ரூபாவாகும். எப்படி பொதுசன முன்னணியின் கொந்துராத்து...!

## உலக சாதனை !

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (FAI) வெளியிட்டிருக்கின்ற அறிக்கையில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப, 1980 ம் வருடத்தில் ஆரம்பித்த பத்தாண்டுகளில் வறுமை வளர்ச்சி வீதம் அதிகரித்து முதல் இடத்தில் இருக்கின்ற நாடு இலங்கையாகும். அதேபோல், உலகில் குறைநிறை குழந்தைகள் பிறப்பு வீதம் கூடுதலான நாடும் இலங்கையேயாகும். இலங்கையில் இருக்கும் குழந்தைகளில் 50வீ மானோர் போஷாக்கின்மையினால் பாதிப்புற்றிருப்பதாக யுனிசெப் நிறுவனம் தனது அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

... கிரிஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.